பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 மாசி 03 செவ்வாய்க்கிழமை 16.02.2021 கதிர் 103

இது ரகசியம் அல்ல!

'இலங்கையில் நேபாளத்திலும் பாரதீய ஜனதாவின் ஆட்சியை அமைக்கும் திட்டம் இந்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவுக்கு உள்ளது' - என்று செய்தி நேற்றுப் பரபரப்பாக வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்தியிருப்பது தெரிந்ததே. பக்கம்02 »

## காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் முடக்கமா? அதிர்ச்சி தருகின்றது அமைச்சர் சரத் வீரசேகரவின் கருத்து

### எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவிப்பு



காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் செயற்படுவதையும், நட்ட ஈடு வழங்கப்படுவதையும் விரும்பவில்லை என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்திருப்பது மிகுந்த அதிர்ச்சியளிக்கின்றது என்று ஐக்கியமக்கள்சக்தியின்கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குவது மனிதாபிமான அடிப்படையிலான நடவடிக்கையாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதற்கு எதிர்ப்பு வெளியிடுவது ஒட்டுமொத்த நல்லிணக்க செயற்பாடுகளையும் எதிர்ப்பதற்கு ஒப்பானதாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகத்தை நடத்திச் செல்ல நாம் விரும்பவில்லை எனவும், ☞2

# ஜெனிவா நெருக்கடியைச் சமாளிக்க ராஜபக்ஷ அரசு இராஜதந்திரப் பேச்சு!



## பல்வேறு நாடுகளுடன் முன்னெடுப்பு; உறுதிப்படுத்தினார் தாரக பாலசூரிய

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 46ஆவது கூட்டத் தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில், உறுப்புரிமை நாடுகளின் ஆதரவைப் பெற்றுக்கொள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான இலங்கை அரசு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

அதற்கமைய ஜெனிவா நெருக்கடியைச் சமாளிக்க இலங்கையின் வெளிவிவகார அமைச்சு, பல்வேறு நாடுகளுடன் இராஜதந்திரப் பேச்சுகளை ஆரம்பித்துள்ளது எனக் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன. ☞2

## இலங்கையிலும் ஆட்சி ஏற விருப்புகின்றதாம் பா.ஜ.க.

### சர்வதேச அரங்கில் வெடித்தது புதிய சர்ச்சை



இலங்கையிலும் நேபாளத்திலும் பாரதிய ஜனதாவின் ஆட்சியை அமைக்கும் திட்டம் இந்தியஉள்துறைஅமைச்சர்அமித் ஷாவுக்கு உள்ளது எனத்திரிபுரா முதலமைச்சர் பிப்லாப் டெப் தெரிவித்துள்ள கருத்தால் புதிய சர்ச்சை வெடித்துள்ளது.

இந்திய உள்துறை அமைச்சர் இலங்கையிலும் நேபாளத்திலும் பா.ஜ.க. அரசை அமைப்பதற்கான திட்டம் குறித்து தெரிவித்தார் எனப் பிப்லாப் டெப் கூறினார் ☞2

## இலங்கையில் பா.ஜ.க. போட்டியிடவே முடியாது

### தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு



இலங்கை சட்டத்துக்கு அமைய இந்தியாவின் பாரதீய ஜனதாக் கட்சி இங்கு போட்டியிட முடியாது.

- இவ்வாறு தேர்தல்கள் ஆணையாளர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

வேறொரு நாடொன்றிலுள்ள கட்சியொன்றை ☞2

## விமலுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

மக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் கொழும்பு, ஹவ்லொக் வீதியை மறித்து போராட்டம் நடத்தினார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டு அமைச்சர் விமல் வீரவன்ஸ உள்ளிட்ட 7 பேருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எதிர்வரும் ஜூன் மாதம் 21ஆம் ☞2

## அரசியல் மிரட்டல்களுக்கு அஞ்சவேமாட்டான் விமல்!



### அவரே நேற்று தெரிவிப்பு

அரசியல் ரீதியான சவால்கள் மற்றும் மிரட்டல்களுக்கு இந்த விமல் வீரவன்ஸ ஒரு போதும் அஞ்சவேமாட்டான்.

- இவ்வாறு அமைச்சர் விமல் வீரவன்ச நேற்று தெரிவித்தார்.

தனக்கு எதிராக அரசுக்குள் எழும் எதிர்ப்புகள் ☞2

## வடக்கில் நேற்றும் 6 பேருக்கு தொற்று

வடக்கு மாகாணத்தில் நேற்றும் 6 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர்களில்ஒருவர்கிளிநொச்சி ஆடைத் தொழிற்சாலைப் பணியாளர் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய ☞2

## இலங்கையில் மேலும் அறுவர் மரணம்; 400 ஐத் தாண்டியது கொரோனாச் சாவு!



இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதையடுத்து நாட்டில் கொரோனாவால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 403ஆக அதிகரித்துள்ளது என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

5 ஆண்களும், ஒரு பெண்ணுமே இறுதியாக உயிரிழந்தோர் பட்டியலில் பதிவாகியுள்ளனர்.

இதன்படி, ஹங்வெல்ல பகுதியைச் சேர்ந்த 57 ☞2

## 76 ஆயிரத்தைத் தாண்டியது தொற்றாளர் எண்ணிக்கை!

### நேற்றும் 774 பேர் அடையாளம்

இலங்கையில்நேற்றும் 774 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானோரின் மொத்த எண்ணிக்கை 76 ஆயிரத்து 428 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியிருந்தவர்களில் 715 பேர் நேற்று குணமடைந்து வீடு ☞2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இலங்கையில் பதியப்படாத கட்சி, இங்கு தேர்தலில் நிற்க முடியாது என்று இலங்கைத் தேர்தல் ஆணையகம் கூறினாலும், நான் கூறப் போகும் தகவல் வேறு ஆச்சரியத்தைத் தரக் கூடியது.

நேற்று இந்தச் செய்தி வெளியாவதற்கு முன்னரே 'இலங்கை பாரதீய ஜனதாக் கட்சி' என்ற அமைப்பைத் தொடங்குவதற்கான முன்முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன என்பதை நான் நன்கு அறிந்திருந்தேன்.

ஏற்கனவே பெரியார் மறவன்புலவோ சச்சிதானந்தன் 'இலங்கை சிவசேனை' அமைப்பை உருவாக்கிச் செயற்பட்டு வருகின்றார்.

அவரல்லாமல் வேறு ஒரு தரப்பு 'இலங்கை பாரதீய ஜனதாக் கட்சியை' ஆரம்பிப்பதற்கான முன்முயற்சியை ஏற்கனவே ஆரம்பித்திருந்தது. அத்தரப்புகளுக்கு இராஜதந்திர ஆசீர்வாதங்களும் இருந்தன என்பதையும் என்னால் உறுதிப்படுத்த முடிந்திருந்தது.

அந்தத் தரப்புகள், தாம் உருவாக்கும் புதிய கட்டமைப்புக்கு ஆதரவு தரமுடியுமா என இங்கு - யாழ்ப்பாணத்தில் - உள்ள சில இந்து அமைப்புப் பெரியார்களுடன் நேற்றுமுன்தினம் கண்டுபேசி உரையாட, அதற்கு இடையில் நேற்றுக் காலை மேற்படி அமித்ஷாவின் விருப்பம் பற்றிய செய்தி வெளிப்பட்டுள்ளது.

ஆகவே, இந்த விடயத்தில் நெருப்பில்லாமல் புகையவில்லை என்பது மட்டும் நிச்சயம்.

ஏற்கனவே பத்துப் பதினைந்து கட்சிகளாகப் பிரிந்து நின்று குத்து வெட்டுப்படும் தமிழர் தரப்புக்கு அரசியல் குதிரை ஏறி ஓட புதிய வாகனம் ஒன்று கிடைத்தாலும் கிடைக்கும் போல. அப்படிக் கிடைத்தால் நல்லதுதானே...!

★ ★ ★

நான் இப்போது குறிப்பிடப்போகும் செய்தி உங்களில் பலரின் வாயைப் பிளக்க வைக்கலாம்.

யாழ்ப்பாணம், மணியம் தோட்டம் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவருக்கு கனடாவில் இருந்து அவரின் யாழ்ப்பாணம் தனியார் வங்கிக் கிளை ஒன்றின் கணக்கு இலக்கத்துக்கு பல்லாயிரம் கோடி ரூபா (சரியான தொகை தெரியவில்லை. ஆனால் அது பல நூறு கோடி ரூபாக்களைத் தாண்டியது) திடீரென வந்திருக்கின்றது. கனடாவில் இருந்து அவருக்குத் தெரிந்த ஒருவர், ஒன்லைன் இணைய வங்கிக் கணக்குகளுக்கு இடையில் ஊடுருவி 'சுத்திய' பணமாக இது இருக்கக் கூடும் என புலனாய்வாளர்கள் சந்தேகிக்கின்றனர் எனக் கூறப்படுகின்றது.

இந்தப் பணம் இலங்கையின் வங்கிக் கணக்குகளுக்குள் சட்ட ரீதியாக உள்வாங்கப்படுமானால், தற்போது எகிறிச் செல்லும் அமெரிக்க டொலரின் பெறுமதி இங்கு ஒரே நாளில் கணிசமாகக் குறையும் என்று கணிப்பிடப்படுவதாகவும் கூறப்பட்டது.

490 கோடி கனேடிய டொலர் என்ற அடிப்படையில் நான்கு தடவைகளுக்குக் குறையாமல் இந்த நிதி மாற்றம் அந்தக் கணக்கு வந்திருப்பதாக ஒரு தகவல் தெரிவித்தது.

அந்தப் பணத்தை அக்கணக்குக்கு அனுமதிப்பதில் மத்திய வங்கி அதிகாரிகளும் புலனாய்வாளர்களும் மிகுந்த எச்சரிக்கையாக இருக்கிறார்கள் எனவும் அறியவந்தது.

சம்பந்தப்பட்ட இளைஞர் மத்திய வங்கியுடன் தொடர்பு கொண்ட போது அவரது பிரதேச கிராம சேவையாளர், பிரதேச செயலாளர் ஊடாக அவரின் ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு கேட்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது. இதனால் விவகாரம் கிராமசேவையாளர் மற்றும் பிரதேச செயலகம் வரை வந்துள்ளது. புலனாய்வாளர்களும் அங்கு வரை வந்து விசாரித்துள்ளனர். நாளை இவ்விவகாரத்தை ஒட்டி அதிரடி நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்படக்கூடும் எனத் தெரிகின்றது.

இதற்கிடையில் இந்தப் பெரும் தொகை நிதியை தாங்கள் 'கிளியர்' செய்து தருகிறோம் - எங்களுடன் ஒத்துழைத்தால் என்ற பெயரில் சில அரசியல் பின்னணியுடைய தரப்புகள் அந்த இளைஞருடன் சம்பந்தப்பட்டோரோடு தொடர்பு கொண்டிருக்கின்றார்கள். இல்லாத, பொல்லாத ஊடகங்களின் பிரதிநிதிகள் என்று கூறிக்கொண்டும் அந்த இளைஞருக்கு உதவும் பெயரில் சிலர் இடையில் புகுந்து காய் நகர்த்த முனைந்திருக்கின்றார்கள். யாழ்.அரச அதிகாரிகளுக்கு தம்மை அடையாளப்படுத்துவதற்காக சில ஊடக அடையாள அட்டைகளை அவர்கள் காட்டியுமுள்ளனர். ஆனால் அந்தப் பெயரில் ஓர் ஊடகம் இயங்குவதாக இதுவரையில் நான் அறியவில்லை. அவர்களில் ஒருவர் தமது பெயரையும் அதிகாரிகளுக்குக் குறிப்பிட்டு முன்னர் யாழ்ப்பாணத்தில் இந்தத் தொலைக்காட்சியில் வேலை செய்திருக்கின்றேன் என்றும் சொல்லியுள்ளார். ஆனால் நான் விசாரித்ததில் அந்தத் தொலைக்காட்சியில் அந்த நபர் குறிப்பிடும் பெயரில் யாரும் முன்னர் வேலை செய்தனர் என்று தெரியவரவில்லை.

கடவுள் அந்த இளைஞருக்குக் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொட்ட வெளிக்கிட்டார் என்றால், இதை இடையில் தட்டிப் பறிக்க சிலர், ஊடகங்களின் பிரதிநிதிகள் என்ற பெயரில் கிளம்பியிருக்கின்றார்கள் போலும்.

அந்த இளைஞருக்குக் கைக்கெட்டியது வாய்க்கெட்டாமல் போகவே அதிக சாத்தியங்கள் தென்படுகின்றன. என்ன நடக்கும் என்பது அடுத்த ஓரிரு தினங்களில் தெரியவரும்...!

– மின்னல் –

## இலங்கையிலும் ஆட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

என்று 'ஈஸ்ட் மொஜொ' தெரிவித்துள்ளது.

கடந்த சனிக்கிழமை திரிபுராவுக்கு விஜயம் மேற்கொண்ட இந்திய உள்துறை அமைச்சர் இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் வெற்றிபெற்ற பின்னர் பா.ஜ.கவுக்கு இலங்கையிலும் நேபாளத்திலும் அரசை அமைக்கும் எண்ணமுள்ளது எனக் குறிப்பிட்டார் என முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது பா.ஜ.க. பல மாநிலங்களில் ஆட்சியமைத்துள்ளது குறித்து தெரிவிக்கப்பட்டபோது இலங்கையும் நேபாளமும் மிச்சமிருக்கின்றன என அமித்ஷா தெரிவித்தார். நாங்கள் இலங்கையிலும் நேபாளத்திலும் கட்சியை விஸ்தரிக்க வேண்டும். அங்கு ஆட்சியை அமைப்பதற்காக வெற்றி பெற வேண்டும் எனத் தெரிவித்தார் என முதலமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

திரிபுரா முதலமைச்சர் தெரிவித்துள்ள இந்தக் கருத்து குறித்து இந்திய மத்திய அரசு விளக்கம் அளிக்கவேண்டும் எனத் திரிபுராவின் எதிர்க்கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது.

முதலமைச்சருக்கு ஜனநாயகம் மற்றும் அரசமைப்பு குறித்து எதுவும் தெரியாது எனக் குறிப்பிட்டுள்ள எதிர்க்கட்சி, அமித்ஷாவின் கருத்துக்கள் வெளிநாடு ஒன்றின் உள்விவகாரங்களில் தலையிடுவதற்குச் சமம் எனவும் குறிப்பிட்டுள்ளது.

## ஜெனிவா நெருக்கடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தாம் தற்போது பல நாடுகளுடனும் பேச்சு நடத்தியுள்ளதாகவும், எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் மத்திய கிழக்கு நாடுகளுடனான பேச்சு நகர்வுகள் முடிவுக்கு வரும் என்றும் பிராந்திய ஒத்துழைப்பு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய தெரிவித்தார்.

தற்போதளவில் தாம் சீனாவின் முழுமையான ஆதரவையும், ரஷ்யா, கியூபா போன்ற நாடுகளின் ஒத்துழைப்புகளையும் பெற்றுக்கொண்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கை மீது இதற்கு முன்னர் 30/1 தீர்மானம் கொண்டுவரப்பட்ட போது, அதற்கு எதிராக வாக்களித்த மற்றும் வாக்களிப்பில் இருந்து விலகிக்கொண்ட நாடுகளின் ஆதரவையும் பெற்றுக்கொள்ள அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது எனவும் அமைச்சர் தாரக பாலசூரிய மேலும் கூறினார்.

## இலங்கையில் பா.ஜ.க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இலங்கையில் பதிவு செய்யவோ அல்லது தேர்தலில் போட்டியிடவோ இயலுமை கிடையாது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்தியாவின் பாரதீய ஜனதாக் கட்சியை இலங்கையிலும் ஆட்சிப்பீடம் ஏற்றும் திட்டமிட்டுள்ளது என இந்திய மத்திய அமைச்சர் அமித்ஷா வெளியிட்ட கருத்து குறித்து பதில் வழங்கியபோதே தேர்தல்கள் ஆணையாளர் நிமல் புஞ்சிஹேவா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் பாரதீய ஜனதாக் கட்சியின் கிளையொன்றை ஸ்தாபித்து, தேர்தலில் போட்டியிடுவதற்கான இயலுமை கிடையாது. இலங்கையிலுள்ள கட்சியொன்று என்றால், இலங்கையிலுள்ள பிரஜை ஒருவரால் கட்சியொன்று ஆரம்பிக்கப்பட்டு, 4 அல்லது 5 வருடங்கள் தொடர்ச்சியாகப் பணியாற்ற வேண்டும். அந்த பின்னர் தேர்தலில் போட்டியிட வேண்டும். அவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுத்த கட்சிகளை மாத்திரமே பதிவு செய்ய முடியும். அவ்வாறான கட்சியை மாத்திரமே ஏற்றுக்கொள்ள முடியும். அவ்வாறின்றி, எவ்வாறான அதிகாரத்தைக் கொண்ட கட்சியாக இருந்தாலும், அதன் கிளையை இலங்கையில் ஆரம்பிக்க முடியாது - என்றார்.

அதேபோன்று, பாரதீய ஜனதாக் கட்சி, இலங்கையிலுள்ள கட்சியொன்றுடனோ அல்லது கூட்டமைப்பொன்றுடனோ இணைந்து தேர்தலில் போட்டியிடுவதற்கான சந்தர்ப்பம் உள்ளதா என வினவிய கேள்விக்கும் அவர் கருத்து வெளியிட்டார்.

இலங்கை சட்டத்துக்கு அமைய, அவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான இயலுமை கிடையாது என அவர் தெரிவித்தார்.

## வடக்கில் நேற்றும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் 377 பேரின் மாதிரிகள் நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. எவருக்கும் தொற்று இல்லை என அறிக்கை கிடைத்துள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று 416 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இவர்களில் 6 பேருக்குக் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

5 பேர் மன்னார் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்தவர்கள். இவர்கள் அனைவரும் ஏற்கனவே தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்களுடன் தொடர்புடையோர் என்ற அடிப்படையில் சுயதனிமைப்படுத்தலில் கண்காணிக்கப்பட்டவர்கள்.

கிளிநொச்சி ஆடைத்தொழிற்சாலை பணியாளர் ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்று அறிகுறிகளுடன் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவருக்கு நேற்று இடம்பெற்ற பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது - என்றார்.

## விமலுக்கு எதிரான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே கொழும்பு பிரதான நீதிவான் புத்திக ஸ்ரீ ராகல இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

2016ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 06ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைகள் சபையின் முன்னாள் ஆணையாளர் செய்யித் ராத் அல் ஹுசேனின் இலங்கை விஜயத்தின்போது அவரின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அரசியல் மிரட்டல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவர் பதவிக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை நியமிக்க வேண்டும் என்று கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு விமல் வீரவன்ஸ தெரிவித்திருந்த கருத்து பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

இந்தக் கருத்து தொடர்பாக அவர் மக்களிடம் மன்னிப்புக் கோர வேண்டும் என்பதுடன், அரசில் இருந்து வெளியேற வேண்டும் என்றும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியினர் கோரிக்கைகளை விடுத்திருந்தனர்.

அத்துடன் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் அவரைக் கடுமையாக விமர்சித்திருந்தனர்.

இந்நிலையில், இது தொடர்பாக நேற்று ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்துள்ள விமல் வீரவன்ஸ,

ஜனாதிபதியை அரசியல் ரீதியில் பலப்படுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்தே நான் செயற்படுகின்றேன்.

தற்போது எனக்கு எதிராக அரசியல் ரீதியில் சவால்களும், மிரட்டல்களும் விடுக்கப்படுகின்றன. இது தொடர்பாக நான் பயமடையவில்லை.

நான் ஜே.வி.பியில் இருந்து வெளியேறும்போது இதனை விடவும் பெரிய சவால்களையே சந்தித்தேன். இதனால் தற்போதைய சவால்கள் ஒன்றும் எனக்குப் பெரிதல்ல - என்றார்.

## காணாமல் ஆக்கப்பட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்காக அரச நிதியை ஒதுக்குவதை எம்மால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் பதிலளிக்கும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா மேற்கண்டவாறு கூறினார்.

## இலங்கையில் மேலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

வயதான ஆண் ஒருவர், கொழும்பு தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்று உயிரிழந்துள்ளார்.

திவுலங்கடவல பகுதியைச் சேர்ந்த 78 வயதான ஆண் ஒருவர், கொழும்பு தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

பல்லேதலவின்ன பகுதியைச் சேர்ந்த 48 வயதான பெண் ஒருவர், கொழும்பு தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

நுகேகொட பகுதியைச் சேர்ந்த 80 வயதான ஆண் ஒருவர், கொழும்பு தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

வத்தளைப் பகுதியைச் சேர்ந்த 68 வயதான ஆண் ஒருவர் ஹங்கொட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

ஹுன்னஸ்கிரிய பகுதியைச் சேர்ந்த 70 வயதான ஆண் ஒருவர், கண்டி போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

## 76 ஆயிரத்தைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

திரும்பியுள்ளனர்.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றில் இருந்து இதுவரை 69 ஆயிரத்து 411 பேர் குணமடைந்துள்ளனர் எனவும், 6 ஆயிரத்து 614 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

# சீண்டும் இலங்கையும் தாண்டும் இந்தியாவும்!

● ந.லோகதயாளன்



நயினாதீவில் மின் உற்பத்தி நிலையம் அமையவுள்ள இடம்...

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள 3 தீவுகளில் சீனா முன்னெடுக்கவிருந்த காற்றாலையுடன் கூடிய சூரிய ஒளி மின்சார உற்பத்தித் திட்டத்துக்குச் செலவாகும் 12 மில்லியன் டொலரை இந்தியா இலங்கைக்கு நன்கொடையாக வழங்குவதன் மூலம் அத்திட்டங்களைப் பொறுபேற்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் சீனா வெளியேறும் நிலைமை ஏற்படும் என நம்பப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தின் நெடுந்தீவு, நயினாதீவு மற்றும் அனலைதீவு ஆகிய தீவுகளில் சீனாவின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படவிருந்த 12 மில்லியன் டொலர் பெறுமதியிலான காற்றாலை மற்றும் சூரிய ஒளி மின்சார உற்பத்தி திட்டம் தற்போது இந்தியாவின் உதவியுடன்தான் முன்னெடுக்கப்படவுள்ளதாக கூறப்படுகின்றது.

இந்தத் திட்டத்தைச் செயற்படுத்தும் ஒப்பந்தத்தை சீன நிறுவனத்துக்கு வழங்குவது தொடர்பில் அமைச்சரவைத் தீர்மானம் அம்பலமாகி, ஊடகங்களில்செய்தியும் வெளிவந்த பின்பு யாழில் உள்ள இந்தியத் துணைத் தூதரகமும் சும்மா இருக்கவில்லை. இதன் ஓர் அங்கமாக துணைத் தூதுவர் பாலச்சந்திரன் அவசர அவசரமாக நயினாதீவிற்கும் சென்று திரும்பியமையோடு நயினா தீவில் இந்த திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட இடத்தையும் நேரில் சென்று பார்வையிட்டும் திரும்பியிருந்தார்.

இவற்றின் அடிப்படையில் இது தொடர்பில் இலங்கை




மின்சக்தி அமைச்சர் டலஸ் அழகப்பெருமாவுடன் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே பேசினார். இத்திட்டத்திற்கான முழுச் செலவான 12 மில்லியன் டொலர்களை இலங்கைக்கு இந்தியா நன்கொடையாக வழங்குவதாக அறிவித்திருக்கிறார். அந்த அறிவிப்பின் பிரகாரம் மின்சக்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும இந்தியாவின் நன்கொடையுடன் யாழ்ப்பாணத்தில் காற்றாலை மற்றும் சூரிய ஒளி மின்சார உற்பத்தி திட்டத்தை மேற்கொள்வதற்கான அமைச்சரவை பத்திரத்தை அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கிறார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தின் நெடுந்தீவு, நயினாதீவு மற்றும் அனலைதீவு ஆகிய மூன்று தீவுகளில் தற்போது நெடுந்தீவு மற்றும் நயினாதீவுகளில் டீசல் மூலமும், அனலைதீவில் இந்த வகையான காற்றாலை மற்றும் சூரிய ஒளி மூலமும் இப்போது மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்படுகிறது.

இந்த நிலையிலேயே ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் சீன நிறுவனம் மூலம் இங்கு காற்றாலை மற்றும் சூரிய ஒளி மின்சார உற்பத்தி திட்டத்தை முன்னெடுப்பதற்கான நடவடிக்கையை அரசாங்கம் எடுத்திருந்தது. இது தொடர்பில் கடந்த ஜனவரி 18ஆம் திகதி அமைச்சரவைப் பத்திரமும் முன்வைக்கப்பட்டிருந்தது.

சீனாவின் காற்று மற்றும் சூரிய ஒளி மின் உற்பத்தி தொடர்பான நிறுவனமான சினோர் இடச்வின் (SINOR ITECHWIN) என்ற நிறுவனமே இந்த மின்சக்தி திட்டத்தை நிர்மாணிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது.

இதனையடுத்தே இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே கடந்த வாரம் மின்சக்தி அமைச்சர் டலஸ் அழகப்பெருமவை சந்தித்து இந்த விடயம் குறித்து நீண்ட பேச்சு நடத்தினார்.

யாழ்ப்பாணத்தின் நெடுந்தீவு இந்தியாவில் இருந்து 49 கிலோ மீற்றரிலும், அனலைதீவு இந்தியாவின் எல்லைக்கு மிக அருகிலும் இருக்கின்றமையால் அங்கு வேறு எந்தவொரு நாட்டினதும் பிரசன்னம் இருப்பதை இந்தியா விரும்பவில்லை எனக் கூறப்பட்டது. அதனால் இவ்விடயத்தில் இந்தியா மிகவும் அக்கறை செலுத்தியது

இருந்தபோதும் இந்த சந்திப்பில் மின்சக்தி உற்பத்தி திட்டத்தை முன்னெடுப்பதற்கான அவசியத்தை அமைச்சர் டலஸ் அழகப்பெரும இந்திய உயர்ஸ்தானிகருக்கு எடுத்துரைத்தார். அந்த வகையில் இந்தத் திட்டத்தை இலங்கையே முன்னெடுக்க வசதியாக இதற்கான நிதி உதவியை நன்கொடையாக இலங்கைக்கு வழங்குவதாக இந்தியா தரப்பில் இந்திய உயர்ஸ்தானிகர் குறிப்பிட்டிருக்கின்றார். இதற்காக 12 மில்லியன் டொலர் (சுமார் 240 கோடி ரூபா) உதவியை நன்கொடையாக இலங்கைக்கு வழங்குவதாகவும் மின்சக்தி அமைச்சரிடம் இந்திய உயர்ஸ்தானிகர் உறுதியளித்துள்ளார். இதனால் வேறு வழியின்றி இந்திய உயர்ஸ்தானிகரின் யோசனையை மின்சக்தி அமைச்சர் டளஸ் அழகப்பெரும முழுமையாக ஏற்றுக்கொண்டு இதுதொடர்பான அமைச்சரவை பத்திரத்தை அடுத்த வரும் அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பார் எனத் தெரிவித்துள்ளார்.

இதேநேரம் இது தொடர்பில் மின்சக்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும ஊடகம் ஒன்றிற்கு கருத்து தெரிவித்த போது –

“யாழ்ப்பாண மக்களுக்கு போதுமான வகையில் குறைவின்றி மின்சாரத்தை விநியோகிக்க வேண்டும் என்பதே மின்சக்தி அமைச்சர் என்ற வகையில் எனது முழுமையான நோக்கமாக இருக்கின்றது. அதற்காக எந்த விதமான ஒரு திட்டத்தை முன்னெடுப்பதற்கும் நான் தயாராக இருக்கின்றேன். அதற்கான நடவடிக்கைகளை நான் எடுப்பேன். அந்த வகையிலேயே ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் இந்த யாழ்ப்பாணத்தின் அனலைதீவு, நயினாதீவு மற்றும் நெடுந்தீவு ஆகிய பகுதிகளில் காற்றாலை மற்றும் சூரிய ஒளி மூலமான மின்சக்தி திட்டத்தை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை

中腾微网
SINOSOAR

எடுக்கப்பட்டது.” – என்றார்.

மேலும் –

“தற்போது இந்த தீவுகளுக்கு டீசல் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகிறது. அப்படி வழங்குவது மிகவும் செலவு கூடியதாகும். அதனால்தான் இந்த காற்றாலை மற்றும் சூரிய ஒளி மூலம் மின்சாரம் உற்பத்தி திட்டத்தை முன்னெடுப்பதற்கு நாங்கள் நடவடிக்கை எடுத்தோம். எனினும் இந்தியா இது தொடர்பில் அக்கறை செலுத்தி இருக்கின்றது. என்னை அண்மையில் சந்தித்த இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே இந்த திட்டத்தை முன்னெடுக்க முழுமையான நிதிச் செலவான 12 மில்லியன் டொலர்களை இலங்கைக்கு நன்கொடையாக வழங்குவதாக உறுதி அளித்தார்.

“இந்தியா இந்தச் செலவை முழுமையாக நன்கொடையாக இலங்கைக்கு வழங்குவதாக அறிவித்துள்ளது. இந்த பிராந்தியம் குறித்து அக்கறை செலுத்துகின்ற ஒரு மிகப்பெரிய நாடாக இந்தியா உள்ளது. அதுமட்டுமன்றி இந்தியாவானது இலங்கையின் மூத்த அண்ணனாகும். எனவே இந்தியா கூறுகின்ற இந்த யோசனையை நாங்கள் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்கின்றோம். அதன்படி இந்தியா இவ்வாறு 12 மில்லியன் டொலர்களை இலங்கைக்கு நன்கொடையாக வழங்கும் பட்சத்தில் அந்த திட்டத்தை இந்தியாவின் உதவியுடன் நாங்கள் முன்னெடுப்போம் என்பதுடன் அதற்கான அமைச்சரவை பத்திரத்தை அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்க எதிர்பார்க்கின்றோம். – என்றும் அவர் கூறினார்.

மேற்படி மூன்று தீவுகளிலும் இப்போது டீசல் மூலமே மின் உற்பத்தி செய்யப்படுகின்றது என்று மின்சக்தி அமைச்சர் கூறினாலும் அனலைதீவில் ஏற்கனவே டீசல், காற்றாலை, சூரியசக்தி ஆகிய மூன்று மூலமாகவும் மின் உற்பத்தி நடந்து வருகின்றது.

இந்தத் திட்டங்களை இந்திய உதவியுடன் முன்னெடுப்பது குறித்த அமைச்சரவைப் பத்திரம் இந்த வாரம் சமர்ப்பிக்கப்படும் என இலங்கை மின்சக்தி அமைச்சர் தெரிவித்திருந்தாலும் இந்த வார அமைச்சரவை நிகழ்ச்சி நிரலில் இந்த விடயம் இடம்பெற்றிருக்கவில்லை என்பதும் குறிப்பிடப்பட வேண்டியுள்ளது.

இதேநேரம் இந்தத் திட்டங்களை சீன நிறுவனத்திடம் ஒப்படைப்பது பற்றிய விடயம் கடந்த ஜனவரி மாதம் 18 ஆம் திகதி அமைச்சரவையில் வந்தது முதல் இந்த விடயம் பக்கம் பக்கமாக ஊடகங்களில் செய்தியாக வந்ததோடு 22ஆம் திகதி இதே பத்திரிகையில் ஒரு பக்கம் முழுமையாக ஆதாரங்களுடன் கூடிய கட்டுரையாகவும் வெளிவந்தபோது அனைவரும் மௌனம் காத்தனர்.

கடைசியில் இந்தியாவின் நேரடி நன்கொடை மூலம் இத்திட்டத்தை முன்னெடுக்கும் விதத்திலான தீர்வு இப்பிரச்சினைக்கு எட்டும் எனத் தெரிந்த பின்பு, 2021.02.14 அன்று யாழில் கூடிய பத்துத் தமிழ்த் தேசியக் கட்சிகளின் கூட்டத்தில் இந்த விடயத்திற்குக் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த தீவுகளை சீனாவிற்கு வழங்குவதான அமைச்சரவைப் பத்திரம் வெளிவந்த பின்னரும் தீர்மானம் நிறைவேற்ற முன்பும் உள்ள இடைப்பட்ட காலத்தில் இதே 10 கட்சிகள் 5 தடவை கூடியபோதும் இது தொடர்பில் வாயும் திறக்கவில்லை என்பதும் குறிப்பிட வேண்டிய அம்சமாகும். இருந்தபோதும் கூட்டமைப்பின் சிலர் தனிப்பட்ட ரீதியில் இவ்விடயத்தில் அதீத கரிசனை கொண்டிருந்தனர் என்பதையும் மறுக்க முடியாது.

இந்தக் காலப்பகுதியில்தான் இந்தியாவில் இருந்து இறக்குமதியாகும் நெத்தலி, மாசி உள்ளிட்ட கருவாடுகளுக்கு இலங்கை அரசு தடை விதித்துள்ளதாகத் தெரிவித்து, அதைக் கண்டித்து தமிழ்நாடு கருவாடு உற்பத்தி சங்கமும் ஓர் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டுள்ளது.

அண்மைக் காலமாக இலங்கை அரசின் பல நடவடிக்கைகள் இந்தியாவை சீற்றம்கொள்ள வைத்துள்ளன. இந்தப் பின்புலத்தில் இந்தியாவை சமரசம் செய்ய வேண்டிய தேவையில் இலங்கை அரசு உள்ளது என்பது கவனிக்கத்தக்கது.

இந்தியாவைப் பொறுத்தமட்டில் முக்கிய எதிரி நாடுகளாக பாகிஸ்தன் மற்றும் சீனாவே உள்ளன. இந்த இரு நாடுகளின் எல்லை மாநிலங்களைத் தவிர்த்து தமது முக்கிய இராணுவ தளபாடங்களின் களஞ்சியங்களை தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா போன்ற தூர மாநிலங்களில் வைத்திருப்பதையே புதுடில்லி விரும்புகிறது. இந்த நாடுகளின் எல்லைப் பகுதியில் இருந்து பல ஆயிரம் மைல்களிற்கு அப்பால் – அதாவது இந்த இரு நாடுகளின் குறுகிய தூர ஏவுகணைகளின் வீச்சு எல்லைக்கு வெளியே இருப்பதனை உறுதி செய்வதே பிரதான இலக்காக இந்தியா கருதுகின்றது.

அவ்வாறான சமயம் எதிரி நாடுகளின் செல்வாக்கு மற்றப் பகுதிகளிலும் தனது கொல்லைக்குள் வருவது தனக்கு என்றுமே தொல்லை என்று அறியாத அளவிற்கு இந்தியா ஒன்றும் அறியாத நாடு அல்ல.

இதேநேரம் தன்னைச் சீண்டும் செயலில் இந்த ஆண்டு இலங்கை அதிகமாகவே ஈடுபடுவதாகவும் இந்தியா கருதுகின்றது. ஆயினும் அந்தச் சீண்டல்களைத் தனது தந்திரோபாயங்கள் மூலம் தாண்டவும் புதுடில்லி பின்நிற்கவில்லை.

இந்த நிலைமையிலும் இந்தியா தனது பாதுகாப்பு முன்னெச்சரிக்கைக்காக கடும் முயற்சியில் இறங்கும். அதற்கான விலையைக் கருத்தில்கொள்ளாது என்பதற்கு 12 மில்லியன் டொலரை முதலாவதாக நன்கொடையாக இந்தியா வழங்க முன்வந்தமை சான்று.

இலங்கையில் தொடரக் கூடிய அழுத்தம் காரணமாக மேலும் அதிக விலையைத் தொடர்ந்தும் செலுத்துமா என்பதும் கேள்விக் குறியாகவே உள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## குருடும் குருடும் குருட்டாட்டம்

பல தரப்புகளுக்கும் தத்தமது அரசியலை நடத்துவதற்குக் காலத்துக் காலம் – அவ்வப்போது – ஒவ்வொரு விடயங்கள் தேவைப்படுகின்றன.

தென்னிலங்கைக் கட்சிகள் இனவாத யுத்தத்தை வைத்து சில காலம் அரசியலை ஓட்டின. அத்தோடு நிரந்தரமான பேரினவாத வெறியையும் ஒரு தளமாக – தந்திரோபாயமாக – அவை பயன்படுத்தின; பயன்படுத்துகின்றன.

அந்த வரிசையில் இப்போது பல தரப்புகளுக்கும் வாய்த்திருப்பது ஜெனிவாவில் ஆரம்பமாகவிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 46ஆவது அமர்வாகும்.

முஸ்லிம் தரப்புகள் மற்றும் கட்சிகளுக்கும் கூட ஜெனிவா அமர்வு இம்முறை அரசியல் நடத்துவதற்கு நல்ல ஆதாரமாக – தளமாக – மாறியிருக்கின்றது.

கொவிட் தொற்றினால் உயிரிழக்கும் இஸ்லாமியர்களின் ஜனாஸாக்களையும் எரிக்க வேண்டும் என்று தீர்மானம் எடுத்து, அதை வல்வந்தமாக நடைமுறைப்படுத்தும் பௌத்த, சிங்களப் பேரினவாத அரசுக்கு எதிராக ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலுக்குச் செல்வோம் என்று முழக்கமிட்டு அரசியல் செய்கின்றனர் முஸ்லிம் அரசியல் தலைவர்கள். இவ்விடயத்தில் ஜெனிவா அமர்வின் போது இலங்கை அரசுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுக்குமாறு இஸ்லாமிய நாடுகளை அவர்கள் வலியுறுத்துகின்றனர் என்று கூறப்படுகின்றது. குறைந்த பட்சம் ஜனாஸாக்களை எரிக்கும் இனக்குரோத நடவடிக்கை விடயத்தை மட்டுமாவது வெளிப்படையாகக் குறிப்பிட்டு, அதற்காக இலங்கைக்கு எதிரான கருத்தியலை ஜெனிவாவில் இஸ்லாமிய நாடுகள் முன்வைக்க வேண்டும் என்பது அவர்களின் நிலைப்பாடு. அதில் எவ்வளவு தூரம் அவர்களால் சாதிக்க முடியும் என்பது சந்தேகமே. எனினும் இங்குள்ள முஸ்லிம் தலைவர்கள் இம்முறை தங்களின் அரசியலுக்கு ஜெனிவா அமர்வை மும்முரமாகப் பயன்படுத்துகின்றார்கள் என்பது மட்டும் உண்மை.

இந்தத் தடவை நாட்டின் கிறிஸ்தவ தரப்புகள் சிலவும் கூட ஜெனிவாப் பூச்சாண்டி காட்டமுற்படுவது புதிய விடயமாகும்.

ஈஸ்டர் ஞாயிறு தொடர்குண்டுத் தாக்குதல் கொடூரத்துக்குக் காரணமானவர்களையும், அந்தத் தாக்குதலை தடுத்து நிறுத்துவதற்கான உரிய முன்னெச்சரிக்கைத் தகவல்கள் கிடைத்தும் கூட அவற்றை உதாசீனப்படுத்தி நடந்து, அக்கொடூரம் அரங்கேறக் காரணமாக அமைந்தவர்களையும் சட்டத்தின் முன் நிறுத்துவதில் மெத்தனப் போக்குக் காட்டப்படும் என்றால், அதற்கு எதிராக ஜெனிவாவில் சர்வதேச நாடுகளிடம் முறையிடுவோம் என்று சில கிறிஸ்தவத் தரப்புகள் கிளம்பியுள்ளன.

இந்தத் தாக்குதல் பின்னணிகள் குறித்து ஆராய அமைக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை வழங்காவிட்டால் – பகிரங்கப்படுத்தாவிட்டால் – ஜெனிவாவில் அப்பிரச்சினையைக் கிளப்புவோம் என்றும் கூட சில தரப்புகள் எச்சரிக்கை விடுக்கும் அளவுக்கு ஜெனிவா விவகாரம் அரசியல் சித்து விளையாட்டுக்கான பந்தாகியிருக்கின்றது.

வழமை போல, தமிழர் தரப்புக்கும் பௌத்த, சிங்களப் பேரினவாத அரசுக்கும் கூட அரசியல் சில்லெடுப்புக்கான தளமாக ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் ஜெனிவா அமர்வு மாறியுள்ளது. அடுத்த திங்கட்கிழமை ஆரம்பமாகும் 46ஆவது அமர்வில், அடுத்த மாதம் மூன்றாம் வார முடிவின் பின்னர் இலங்கை விவகாரம் பிரதானமாக எடுக்கப்படும் போது, அதை ஒட்டி முட்டி மோதுவதற்கு சிங்கள அரசும் தமிழர் தரப்பும் மும்முரமாகத் தயாராகி வருகின்றன.

என்றாலும் கொவிட் தொற்றுக் காரணமாக இம்முறை அமர்வு ஜெனிவாவில் பகிரங்க வெளியில் நடக்காது. மெய்நிகர் முறையில் – ஒன்லைன் வடிவத்தில் – நடைபெறுவதுதான் தமிழர் தரப்பில் பல அரசியல் ஆரவாரக்காரர்களுக்குப் பெரும் பின்னடைவு. அவர்களின் அரசியல் பித்தலாட்டங்களை அரங்கேற்ற இம்முறை வாய்ப்புக் கிடைக்கப் போவதில்லை. ஜெனிவாவில் போய் நின்று, ஏதோ பிரதான அமர்வில் பங்குபற்றி சண்டப் பிரசண்டம் பண்ணுபவர்கள் போல அங்கு எடுப்பு எடுத்து நடிக்க இம்முறை சந்தர்ப்பம் இல்லை என்பது அவர்கள் கவலை.

தமிழர் தரப்பில் அரசியலில் தோற்கடிக்கப்பட்டவர்கள் சிலர் – செல்லாக்காசாகிய சிலர் – ஜெனிவா அரங்கை வைத்து அரசியல் பிழைப்பு நடத்த முற்பட்டிருக்கின்றனர். அவர்களின் அறிவிப்புக்களை நோக்கும் போது திருமூலரின் திருமந்திரவரிகள்தாம் நினைவுக்கு வருகின்றன.

*“குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடிக் குருடும் குருடும் குழி விழுமாறே....”* – என்றார் திருமூலர்.

ஜெனிவா விவகாரத்தைத் தமிழர் தரப்பில் கையாளும் பிரகிருதிகள் என்று அறிவிக்கப்பட்டிருக்கும் பட்டியலைப் பார்க்கும் போது குருடும் குருடும் குருட்டாட்டம் நடத்தத் தயாராகி விட்டனர் என்றே தோன்றுகின்றது.

ஜெனிவாவை வைத்து ஒவ்வொரு அரசியல் தரப்பும் நடத்தும் திருக்கூத்தை நோக்கும் போது குருட்டாட்டம் நினைவுக்கு வருவது தப்பில்லைத்தான்...!

# பொத்துவில் – பொலிகண்டி பேரணியில் அநீதிகளுக்கு எதிராகவே பங்கேற்றேன்!

## வாக்குமூலத்தில் ரவிகரன் தெரிவிப்பு



எமது மக்களுக்காகவும் எமது மக்களுக்கு இழைக் கப்படும் அநீதிகளுக்கு எதிராகவும் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டிவரை என்னும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார் என வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை என்னும் போராட்டத்தில் கலந்துகொண்டமை தொடர்பில் முல் லைத்தீவு பொலிஸார் ரவிகரனிடம் நேற்று (திங்கட்கிழமை) வாக்கு மூலம் ஒன்றைப் பெற்றிருந்தனர்.

பொலிஸ் நிலையத்தில் தனது வாக்கு மூலத்தைப் பதிவுசெய்த பின்னர் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் கருத்துத் தெரிவித்த அவர்–

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான எழுச்சிப் போராட்டத்தில் நான் முல்லைத்தீவிலே கலந்து கொண்டமை தொடர்பிலே வாக்குமூலம் ஒன்றைப் பெறுவதற்காக முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப்பட்டிருந்தேன்.

அவ்வாறு அழைக்கப்பட்டதற்கமைய என்னிடம் அங்கே வாக்குமூலம் பெறப்பட்டது. அந்தவகையில் இந்த போராட்டம் பொது மக்கள் சார்ந்து பலர் கலந்து கொண்டு நடாத்தப்பட்ட ஒரு போராட்டமாகும்.

இந்தப் போராட்டத்திலே நான் கலந்து கொண்டதாகவும் பொலிஸார் எனக்கு நீதிமன்றத் தடைக் கட்டளையைத் தந்ததாகவும் தெரிவித்தனர்.

இருப்பினும் நீதிமன்றக் கட்டளையிலே எனது பெயர் உள்ளடக்கப்படவில்லை என்றும் பொதுவாகவே அக்கட்டளை இருந்ததெனவும் அதனாலேயே குறித்த நீதிமன்றக் கட்டளையை பெற்றுக்கொள்ளவில்லை என்பதையும் தெரிவித்தேன்.

அத்தோடு அன்றைய சூழலில் எமது மக்களுக்கா கவும் எமது மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராகவும் அமைதியான முறையிலே பிறருக்கு இடையூறுகள் ஏற்படுத்தாவண்ணம் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமையை வாக்குமூலத்தில் தெரிவித்தேன்.

அதேவேளை பொதுமக்கள் அனைவரும் திரண் டுவந்து இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த நிலையில், நானும் மக்கள் பிரதிநிதி என்ற வகையில் அப்போராட் டத்தில் கலந்து கொண்டேன் என்பதையும் எனது வாக்கு மூலத்தில் பதிவுசெய்துள்ளேன்.

மேலும் நான் பொலிஸ் நிலையத்துக்கு சென்றவுடன் வாக்குமூலத்தைப் பெற்று உடனடியாகவே என்னை அனுப்பிவைத்து விட்டார்கள். – என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இலங்கைக்குப் பாரிய அச்சுறுத்தல் உள்ளது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை!

பிரித்தானியாவில் இனங்காணப்பட்ட உருமாறிய புதிய வகை வைரஸ் இலங்கையிலும் 4 பிரதேங் களில் கண்டறியப்பட்டுள்ளமையால் , காலம் தாழ்த் தாமல் உரிய தீர்மானங்களைத் துரிதமாக எடுக்க வேண்டும்.

அவ்வாறில்லை என்றால் அடுத்த மாதத்திற்குள் நாடு பாரிய அபாயத்துக்கு முகங்கொடுக்கக் கூடிய நிலைமை ஏற்படும் என்று இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் றோஹண தெரிவித்தார்.

இலங்கையில் இனங்காணப்பட்டுள்ள புதிய வகை வைரஸ் தொடர்பில் தெரிவிக்கையில் இதனைக் கூறிய அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

இலங்கையில் மாவட்ட ரீதியில் நாளாந்தம் இனங் காணப்படும் தொற்றளர் எண்ணிக்கை அதிகரித்துள்ள அதேவேளை, மரணங்களின் எண்ணிக்கையும் உயர்வடைந்து செல்கிறது.

இந்நிலையில் பிரித்தானியாவில் இனங் காணப் பட்ட உருமாறிய புதிய வகை வைரஸ் இலங்கையின் 4 இடங்களில் கண்டறியப்பட்டுள்ளது. எனவே, இந்த நிலைமையை அரச சுகாதார அதிகாரிகள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இந்த சந்தர்ப்பத்தில் சரியான தீர்மானமொன்றை எடுக்காவிட்டால் அடுத்தடுத்த மாதங்கள் பாரிய ஆபத்து டையவையாகும்.

அடுத்த மாதத்திற்குள் பாரிய ஆபத்துக்குள் தள்ளப்பட்டு கொவிட் பரவலால் முழு நாடும் நெருக் கடிக்கு முகங்கொடுக்கக் கூடிய நிலைமை ஏற்படும்.

எனவே, நாட்டில் கிராமப் புறங்கள் உள்ளிட்ட கீழ்மட்டங்களில் காணப்படுகின்ற நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்து, அவற்றை இலக்காகக் கொண்டு துரித மான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அரச சுகாதார தரப்பினரிடம் கேட்டுக் கொள்கின்றோம். – என்றார்.

# அபாய வலயத்தில் வசிப்பவர்களுக்கு நேற்று முதல் தடுப்பூசி

மேல் மாகாணத்தில் அதி அபாய வலயமாக அடையாளம் காணப்பட்டுள்ள பிரதேசங்களில் வசிப்பவர்களுக்குக் கொரோனாத் தடுப்பூசி ஏற்றும் செயற்பாடுகள் நேற்று முதல் ஆரம்பமாகியுள்ளன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அறிவுறுத்தலுக்கு அமைய குறித்த செயற்பாடுகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்படக்கூடியவர்கள், அதிக ஆபத்துள்ள குழுக்கள் மற்றும் பொதுமக்களுடன் நெருக்கமாகப் பழகும் நபர்களைக் குறிவைத்து 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குக் கொரோனாத் தடுப்பூசிகள் வழங்கப்படும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இன்று முதல் தடுப்பூசி

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இன்று (செவ்வாய்க்கிழமை) தடுப்பூசி செலுத்தப்படவுள்ளதாக நாடாளுமன்றத்தின் படைக்கள சேவிதர் தெரிவித்துள்ளார்.

அதன்படி இராணுவ வைத்தியசாலையில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அஸ்ட்ரா ஜெனெகா கொவிஷீல்ட் தடுப்பூசிகள் செலுத்தப்படவுள்ளன.

இதேவேளை, மேல் மாகாணத்தில் அதி அபாய வலயமாக அடையாளம் காணப்பட்டுள்ள பிரதேசங்களில் வசிப்பவர்களுக்கு கொவிட்– 19 தடுப்பூசி செலுத்தும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அறிவுறுத்தலுக்கு அமைய குறித்த செயற்பாடுகள் இன்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்படக்கூடியவர்கள், அதிக ஆபத்துள்ள குழுக்கள் மற்றும் பொதுமக்களுடன் நெருக்கமாக பழகும் நபர்களை குறிவைத்து 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசிகள் வழங்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

GCE (Ordinary Level) Examination
Training question paper for students preparing

**English Language**

Mr.N.Thuvaragan
HND in English Teacher
Mu/Chammalai Maha Vidyalayam T.P. 0770655766

## Part I

**Test 01**

**Complete the following tips for healthy eating. Use the suitable works from the box. *The first one is done for you.***

Water, calories, body, fruits, cold, nutrients, unhygienic, foods, eatables, balanced diet, harmful

Eat a (1) balance diet because it provides you the main (2) ………………. Eat sensibly, our (3)………………….. needs a certain number of (4) …………………… each day

Eat a lot of (9) ………………………….. and vegetables. Avoid taking too hot (10) ……..……………………. and too (11)…………………….. drinks.

Avoid eating (5) ……………… that contain in high calories. They are (6)…………….. to your health. Drink a lot of pure and boiled (7) ……………..…every day. Avoid eating open, (8)……………..food from hawkers.

**Test 02**

**Select the correct phrase from the box and complete the notices. *The first one is done for you.***

| | | |
|---|---|---|
| **Bus stand** (2) …….B…… | **Zoo** (1) ……….…… | **Public library** (3) ……………….. |
| Public property (4) ……………….. | Park (5) ……………….. | Dental clinic (6) ……………….. |



Cordination:- R.Muraliraj

A. Brush your teeth after meals.
B. Don't litter
C. Keep silent
D. Don't feed the animals.
E. Use the path. Don't walk on the lawn.
F. Keep the environment clean.

**Test 03**

**Read the description of Sunil and write about Sita.**

| Name | Age | Appearance | Clothes | Hobby | Ambition |
|---|---|---|---|---|---|
| Sunil | 15 years | Short/fat | Jeans/ T-shirts | Playing computer games | Lawyer |
| Sita | 16 years | Slim/ fair | Skirts/ blouses | Playing tennis | Accountant |

Sunil is 15 years old. He is short and fat. He always wears jeans and T-shirts. He likes playing computer games. He wants to become a lawyer.

Sita…………………………………………………………………………………………
……………………………………………………………………………………………..
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………

**Test 04**

**Read the following notice and complete the information about the talk. *One is done for you***

NOTICE
There will be a special talk on "The Advantages of Reading" organized by the Junior English Literary Union of the school to mark the Library week. The talk will be given by Mr.R.Rajaratnam, Professor at the University of Jaffna. It will be held in the school auditorium on Friday 10th August 2013 at 9.00 a.m.
All members are welcome Secretary

1. Topic of the talk: ………………………………………………………
2. Guest Speaker: …………………………………………………………
3. Speaker's Designation: ……………………………………………………
4. Purpose of the talk: ………………………………………………………
5. Date: ……………………………………………………………………
6. Time: 9.00 a.m …………………………………………………………
7. Venue: …………………………………………………………………
8. Occasion: ………………………………………………………………
9. Participants: ……………………………………………………………
10. Organizer: ……………………………………………………………
11. Written by: ……………………………………………………………

**Test 05**

**Complete the dialogue using the given utterance. Write the correct letter in the blank. *One is done for you***

1) A: Excuse me (1) ……………………….. for my camera?
B: Yes, there's a supermarket close by.
A: (2) ..........b…………?
B: About 25m from here (3) …………………………..

2) C: Can I help you?
D: (4) ……………………………….
C: Sure, (5) ……………………………….
D: Yes, I think I'm twenty five.

3) A: Yes, Madam, what would you like to eat?
B: (6) ………………………………………….
A: Anything else?
B: No, that's all.

a) Two rolls and cup of tea.
b) How far is it?
c) I'd like to try on a tight skirt.
d) Next to the school
e) Where can I buy a film roll?
f) What's the size you need?

**Test 06**

**Write a paragraph on one of the following topics. Use about 50 words**

a) The book you enjoyed recently.
b) The place you visited.

…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………



**Test 07**

Read the following passage, and answer the questions.

John had one shelf in the bookcase for his own books. There were books of adventure andschool stories. Most of the books contained exciting pictures of hunters fighting battles withhungry wolves or man-eating lions. Other showed spaceships circling the earth, linking up inspace, or landing on strange planets.

John knew many of these stories by heart, for he had read them so many times. Yet, everyevening he would take one down from the self and carry it away to his bedroom, to look atjust at eagerly as if it were a new book. Now and then there were new books to add to theshelf, and his proudest possession was the colorful encyclopedia which he had been given for his birthday.

1) Which kind of books did John like?
…………………………………………………………………………………………

2) What did most of the books contain?
…………………………………………………………………………………………

3) How did John know many of these stories by heart?
…………………………………………………………………………………………

4) How often did he add new books to his shelf?
…………………………………………………………………………………………

5) Underline the sentence that is true.
a. Of airmen flying over deserts
b. Of fights between hunters and animals
c. Of girls playing netball

**Test 08**

You are the secretary of the Science Union of your school. The committee has decided to organize a Science Quiz competition among all Grade 9 students.
Write a notice to all Grade 9 students requesting them to take part at the competition. Give a Date, Time, and Venue.

# ராஜபக்ஷர்களுக்கு எதிராக அரசியல் சூழ்ச்சியை முன்னெடுக்க ஒருபோதும் இடமளிக்க முடியாது!

## ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தீவிரம்



ஸ்ரீலங்காபொதுஜனபெரமுனவிற்குள் ராஜபக்ஷர்களுக்கு எதிராக அரசியல் சூழ்ச்சியை முன்னெடுக்க ஒருபோதும் இடமளிக்க முடியாது. கூட்டணியின் பங்காளிக்கட்சியினர் கூட்டுப்பொறுப்புடன் செயற்பட வேண்டும் என நெடுஞ்சாலை அபிவிருத்தி அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

பொல்காவலைபிரதேசத்தில்இடம்பெற்ற பொதுஜன பெரமுனவின் தொகுதி அமைப்பாளர் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

அனைத்து தரப்பினரையும் ஒன்றிணைத்து பொதுஜன பெரமுன ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் அரசாங்கத்தை தோற்றுவித்துள்ளது. நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை ஜனாதிபதி சிறந்த முறையில் செயற்படுத்துகிறார். 2019 ஆம் ஆண்டு ஆட்சியதிகாரத்தைப் பெற்ற காலத்திலிருந்து பல சவால்கள் தோற்றம் பெற்றுள்ளன. அனைத்தையும் சிறந்தமுறையில்வெற்றிகொண்டுள்ளோம்.

அரசாங்கத்துக்குள் இருந்துகொண்டு அதற்கு எதிராகச் செயற்படும் தரப்பினரை இனங்காண்பது கடினமானதாக உள்ளது. ஆளும் தரப்பினர் ஒரு சிலர் எதிர்க்கட்சியினருக்குச் சார்பாகச் செயற்படுகின்றனரா என்ற சாதாரண சந்தேகம் எழுந்துள்ளது. முன்னாள் ஜனாதிபதி தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியை 2014 ஆம் ஆண்டு வீழ்த்துவதற்கு நண்பர்களாக இருந்தவர்களே முன்னின்று செயற்பட்டார்கள்.

ராஜபக்ஷர்களுக்கு எதிரான சூழ்ச்சியை பொதுஜன பெரமுனவிற்குள் இருந்து கொண்டு முன்னெடுக்க இடமளிக்க முடியாது. கூட்டணியில் அங்கம் வகிக்கும் பங்காளிக்கட்சியினர் கூட்டுப்பொறுப்புடன் செயற்படலாம். பலதரப் பட்ட அரசியல் கட்சிகளை ஒன்றிணைத்து கூட்டணியமைத்துள்ளமையால் கருத்து முரண்பாடுகள் தோற்றம் பெறுவது சாதாரண விடயம்.

பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணிக்குள் ஏற்பட்டுள்ள கருத்து முரண் பாட்டுக்கு பேச்சு ஊடாகத் தீர்வைக் காணமுடியும். இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதி, பிரதமர் மற்றும் உயர் மட்ட தலைவர்கள் இவ் வாரம் சிறந்த தீர்மானத்தை எடுப்பார்கள். கூட்டணிக்குள் முரண்பாட்டை ஏற்படுத்தி நல்லாட்சி அரசாங்கத்தில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தை தற்போது ஏற்படுத்தலாம் என்று எதிர்க்கட்சியினர் வகுத்துள்ள திட்டம் ஒருபோ தும் வெற்றி பெறாது. – என்றார்.

## ஊடகவியலாளரின் வீட்டுக்கு சென்று அவரது குடும்பத்துக்கு அச்சுறுத்தல்!

கல்முனை, ஜன. 16

ஊடகவியலாளரான இராமலிங்கம் தில்லைநாயகத்தின் வீட்டுக்குச்சென்ற இனந்தெரியாதவர்கள், அவரது குடும்பத்தை அச்சுறுத்தியமையால் அவரது குடும்ப உறுப்பினர்கள் அச்ச நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை மாலை கல்முனையில் அமைந்துள்ள அவரது வீட்டில் இடம் பெற்றுள்ளது.

அதன் காரணமாக அச்சமடைந்த அவரது குடும்பம், கல்முனை பொலிஸ் நிலையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை முறைப்பாடு ஒன்றையும் பதிவு செய்துள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது –

ஊடகவியலாளர் தில்லைநாயகத்தின் வீட்டுக்குச் சென்ற இனந்தெரியாதவர்கள், தங்களை வங்கி ஊழியர்கள் என அடையாளப்படுத்தியதுடன் தில்லைநாயகத்தின் மனைவி வங்கியில் மேலதிகமான பணத்தைப் பெற்று வந்தார் எனவும் அதனை மீளத் தருமாறு கூறியமையுடன் ஊடகவியலாளரான தில்லைநாயகத்தை பற்றியும் மிரட்டும் தொனியிலும் விசாரித்து சென்றுள்ளனர்.

கல்முனையில் வசித்து வந்த ஊடகவியலாளரான தில்லைநாயகம் இதற்கு முன்னரும் பல தடவைகள் இனந்தெரியாதவர்களால் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டவர் என்பதுடன் அவரது கல்முனையிலுள்ள வீட்டுக்கு இரவு வேளையில் புகுந்த இனந்தெரியாதவர்கள் அவரது ஊடகக்கருவிகள் உட்பட ஊடகம் சம்பந்தமான ஆவணங்களையும் எடுத்துச்சென்றிருந்தனர்.

இந்த சம்பவங்கள் தொடர்பாக இதற்கு முன்னரும் கல்முனை பொலிஸ் நிலையத்திலும் கல்முனை மனித உரிமை அலுவலகத்திலும் முறைப்பாடுகள் செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## 5 லட்சம் கொவிட் தடுப்பூசி டோஸ்கள் அடுத்த ஏழு நாள்களுக்குள் வந்துசேரும்!

பொது மக்களுக்கு தடுப்பூசி செலுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்ட 5 லட்சம் டோஸ் கொவிட் – 19 தடுப்பூசிகள் அடுத்த ஏழு நாள்களில் நாட்டை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதன்படி அடுத்த வாரம் சில நாள்களுக்குள் இதன் முதல் தொகுதி நாட்டை வந்தடையும் என கொவிட் 19 வைரஸ் கட்டுப்பாட்டுக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

பொது மக்களுக்குத் தடுப்பூசி போடும் திட்டம் மார்ச் மாதத்தில் ஆரம்பிக்கும் என்றும் அவர் கூறினார்.

இதற்கிடையில், ஜனவரி 29 ஆம் திகதி முதல் இதுவரையான காலப் பகுதியில் இலங்கையில் ஒரு லட்சத்து 89 ஆயிரத்து 349 முன்னணி தொழிலாளர்கள் தடுப்பூசிகளைப் பெற்றுள்ளனர் என சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

## கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியில் பாடசாலை ஆரம்பம்!

கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியில் தரம் ஒன்று மாணவர்கள் நேற்று (திங்கட்கிழமை) சிறப்பாக உள்வாங்கப்பட்டனர்.

கொரோனா தொற்று அச்சுறுத்தலுக்கு மத்தியில் மேல் மாகாணத்தை தவிர்ந்த ஏனைய பகுதிகளளில் உள்ள பாடசாலைகளில் தரம் 01 மாணவர்கள் உள்வாங்கும் நடவடிக்கைகள் நேற்று மிகவும் சிறப்பாக நடைபெற்றன.

ஒவ்வொரு வருடமும் தரம் ஒன்றுக்கு மாணவர்கள் உள்வாங்கும் நடவடிக்கைகள் ஜனவரி மாதம் இடம்பெறுகின்ற போதிலும் கொரோனா தொற்று பரவல் காரணமாக இந்நடவடிக்கைகள் பிற்போடப்பட்டன.

இந்நிலையில் நேற்று சகல பாடசாலைகளிலும் மாணவர்கள் உள்வாங்கப்பட்டமையுடன் தரம் ஒன்றுக்கு உள்ளவாங்கும் ஒவ்வொரு மாணவர்களுக்கும் பாலர் புரட்சி எனும் செயற்திட்டத்தின் கீழ் முதன் முறையாக மரக்கன்று ஒன்றும் வழங்கப்பட்டது.

வீடுகளில் மரக்கன்றுகள் நாட்ட இடமில்லாத மாணவர்களுக்கு பாடசாலை வளவில் மரக்கன்றுகள் நாட்டுவதற்கான ஒழுங்குகளும் செய்யப்பட்டிருந்தன. இதற்கமைய பாடசாலை வளவிலும் மரக்கன்றுகள் நாட்டப்பட்டன.

## பாடசாலை நிகழ்வுகளுக்கு மறு அறிவித்தல் வரை தடை!

பாடசாலைகளில் நிகழ்ச்சிகளை நடத்துதற்கு மறு அறிவித்தல் வரை தடை விதிக்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் காரணமாகவே இவ்வாறு நிகழ்ச்சிகளை நடத்துதற்கு மீள் அறிவித்தல் வரை தடை விதிக்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக அனைத்து மாகாண, வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் பாடசாலை அதிபர்களுக்கும் கல்வியமைச்சின் செயலாளரால் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## குழந்தைகளை யாசகம் செய்ய அனுப்பிய இரு பெண்கள் கைது!

தமது குழந்தைகளை பிச்சைக்காரர்களாகப் பயன்படுத்தியமையுடன், பாலியல் தொழிலில் ஈடுபட்ட இரண்டு பெண்களை அம்பலாங்கொட பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இரண்டு பெண்களும் 32 மற்றும் 26 வயதுடையவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்கள் இருவரும் இரு குழந்தைகளின் தாய்மார்கள்,

அம்பலாங்கொட பகுதிக்கு குழந்தைகளை பிச்சை எடுக்க அனுப்பிவிட்டு இவர்கள் பாலியல் தொழிலில் ஈடுபடுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதையடுத்து குறித்த பெண்களும் அவர்களது நான்கு குழந்தைகளும் பலபிட்டி நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

பிணை வழங்கியமையைத் தொடர்ந்து, 22 ஆம் திகதி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## புதிய வகை கொரோனா வைரஸ் பரவல்; தேசிய செயற்பாட்டு மையம் அவதானம்!

அண்மையில் இங்கிலாந்தில் இனங்காணப்பட்டுள்ள உருமாறிய புதிய வகை வைரஸ் இலங்கையின் சில பிரதேசங்களிலும் கடந்த வாரம் கண்டறியப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கொரோனாத் தடுப்பிற்கான தேசிய செயற்பாட்டு மையம் விசேட அவதானம் செலுத்தியுள்ளது.

புதிய வகை உருமாறிய வைரஸ் பரவலுடன் நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் ஆராய்ந்து வருவதோடு , அதற்காக முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்ந்துவருவதாக பொதுச் சுகாதார சேவைகளுக்கான பிரதிப் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

பிரித்தானியாவில் வேகமாகப் பரவி வரும் வைரஸின் புதிய வகை இலங்கையிலும் பல பகுதிகளில் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அது இலங்கையில் பாரியளவிலான தாக்கத்தை ஏற்படுத்த வில்லை என்று ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவப் பிரிவு பேராசிரியர் நீலிகா மலவிகே தெரிவித்துள்ளார்.

நாட்டில் சில இடங்களில் புதிய வகை வைரஸ் அடையாளம் காணப்பட்டுள்ள போதிலும் அதன் பரவல் பாரியளவில் இல்லை.

எனினும், முன்னைய வைரஸை விட இதற்கு வேகமாகப் பரவும் இயலுமை இருப்பதாக பல நாடுகள் தெரிவிக்கின்றன. இந்த புதிய வகை வைரஸ் உள்நாட்டில் உருவாவதற்கான வாய்ப்புள்ள போதும், வெளியில் இருந்தே வந்திருக்க முடியும் எனக் கருதுவதாகவும் பேராசிரியர் நீலிகா மலவிகே தெரிவித்துள்ளார்.

இலங்கை வரும் சுற்றுலாப் பயணிகள் தொடர்பில் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டாலும் , எதிர்பாராத விதமாக பரவக்கூடிய வாய்ப்பும் இருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

புதிய வகை வைரஸ் கொழும்பு, அவிசாவளை, பியகம, வவுனியா ஆகிய பகுதிகளில் அடையாளம் காணப்பட்டமையால், அங்கு மாத்திரமே தொற்று இருப்பதாக அர்த்தப்படாது.

இந்த வைரஸ் தொடர்பான தேசிய வேலைத்திட்டம் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை என வைத்திய ஆய்வு கூட நிபுணர் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், தற்போது இனங்காணப்பட்டுள்ள வைரஸ் தவிர மேலும் பல வகையான வைரஸ்கள் நாட்டில் பரவியிருக்கின்றனவா, இல்லையா என்பதை தற்போதைக்கு கூற முடியாது எனவும் அவர் தெரிவித்தார்

காலைக்கதிர் Kalaikkathir

# இழப்புக்களை என்றும் சந்திக்காமல் தமிழர்கள் நிம்மதியாக வாழவேண்டும்!

## வியாழேந்திரன் தெரிவிப்பு



இப்போது இருக்கும் தலைமுறை நிம்மதியாக சந்தோசமாக இழப்புக்களை சந்திக்காமல் வாழ வேண்டும் என இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

வாழைச்சேனை பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட முறாவோடை ஏழாம் குறுக்கு வீதி கொங்கிறீட் வீதியாக புனரமைக்கப்படுவதற்கான ஆரம்ப நிகழ்வில் நேற்று(திங்கட்கிழமை) கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்குறிப்பிட்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொழிற்சாலைகளை உருவாக்கும் பட்சத்தில் மாவட்டத்தில் வறுமையை இல்லாது ஒழிக்க முடியும். தமிழ் மக்களுடைய கண்ணீரையும், பிரச்சினைகளையும் வைத்துக் கொண்டு காலா காலமாகத் தமிழ் மக்களின் கல்லறைகளில் நின்று கொண்டு செய்கின்ற பிழைப்புவாத அரசியலை வங்குரோத்து அரசியலை நாங்கள் தொடர்ந்து செய்ய முடியாது.

ஆகவே மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுபவர்தான் அந்த மக்கள் தலைவனாக இருக்க முடியும். தேர்தல் காலங்களில்நாங்கள்வழங்கியவாக்குறுதிகளை நிறைவேற்றுவோம். முப்பது வருடம் இடம்பெற்றயுத்தத்தின் இழப்பை நான்கு மாதத்தில் நிறைவு செய்ய முடியாது. நாங்கள்கட்டம்கட்டமாகவேலைத் திட்டங்களை செய்து முடிப்போம்.

மட்டக்களப்புமாவட்டத்தில்அரசாங்கம் சார்பாக இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலம் ஒரு லட்சம் வேலை வாய்ப்பின் ஊடாக ஆயிரத்து இருநூறு பேருக்கு வேலை வழங்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு பேரும் இல்லாது விட்டிருந்தால் இந்த வேலை குறைவாகக் கிடைத்திருக்கும்.

முஸ்லிம் அரசியல்வாதிகள் ஆளும் கட்சியோடு இருந்த படியால் அவர்கள் பகுதிகள் வளமாகக் காணப்படுகின்றன. கடந்த காலத்தில் அவர்கள் அபிவிருத்திக்காக போராடி எந்த உரிமையும் இழந்ததாக நான் பார்க்கவில்லை. ஆனால் எமது சமூகத்தில் உரிமையும், அபிவிருத்தியும் இல்லை. இருக்கின்றவர்களை அழிக்கின்ற வேலைத்திட்டத்தை எமது தமிழ் அரசியல்வாதிகள் கையில் எடுத்துள்ளார்கள்.

தமிழ்த் தேசியம் தடம் மாறலாம். ஆனால் தடம் புரளக்கூடாது. சாத்வீக போராட்டம், ஆயுதப் போராட்டம் இடம்பெற்றது. தற்போது அரசியல் போராட்டம் உள்ளது. இந்த போராட்டம் எவ்வாறு இருக்க வேண்டும்என்று சிந்திக்க வேண்டும். பல பிரச்சினைக்கு மத்தியில் வாழ்ந்த எமது தமிழ் சமூகத்தை மீண்டும் பிரச்சினைக்குள் மாட்டி விடுகின்ற வேலைத் திட்டத்தை செய்ய முடியாது.

இப்போது இருக்கும் தலைமுறை யாவது நிம்மதியாக சந்தோசமாக இழப்புக்களை சந்திக்காமல் வாழ வேண்டும். 2009ஆம் ஆண்டு எந்த நாடாளுமன்ற உறுப்பினரும் மக்களுக்காகப் போராடவுமில்லை. ஆயுத களத்தில் இறங்கவுமில்லை. அவர்கள் குடும்பத்தோடு மாறிவிட்டார்கள். இன்று உசுப்பேத்துகின்ற, உணர்ச்சி வசப்படுத்துகின்ற அரசியலை செய்ய முடியாது. அது எமது சமூகத்தைப் பாதிக்கும்.

மாவீர நாளில் முகப் புத்தகங்களின் பதிவிட்டவர்கள் சிறையில் உள்ளார்கள் இவர்களை உசுப்பேத்தியவர்கள் இன்று அரசாங்க பாதுகாப்புடன் திரிகின்றார்கள். ஆனால் அவர்களின் பெற்றோர்கள் கண்ணீருடன் சிறைச்சாலை சென்று வருகின்றார்கள் - என்றார்.

# 455 பயணிகள் நாடுவந்தடைவு!

வெளிநாடுகளில் இருந்து மேலும் 455 பயணிகள் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

நேற்று (திங்கட்கிழமை) காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணி நேரப் பகுதியில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கிய 10 விமானங்களின் மூலமாக இவர்கள் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

அவர்களுள் ஐக்கிய அரபு எமிரேட்ஸின் அபுதாபியிலிருந்து வருகை தந்த 98 பேரும் கட்டாரின் டோஹாவிலிருந்து வருகை தந்த 70 பேரும் அடங்குகின்றனர்.

இவ்வாறு நாட்டை வந்தடைந்த அனைவரும் இராணுவத்தினரால் தனிமைப்படுத்தல் நடவடிக்கைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

இதேவேளை, இக்காலக் கட்டத்தில் 11 விமானங்களின் மூலமாக கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து 663 பயணிகள் நாட்டைவிட்டு புறப்பட்டுள்ளனர்.

மேலும் இக்காலகட்டத்தில் ஒரு லட்சத்து 74 ஆயிரத்து 532 கிலோகிராம் எடையுள்ள பொருள்கள் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளதுடன், 2 லட்சத்து 69 ஆயிரத்து 874 கிலோ கிராம் எடையுடைய பொருள்கள் விமான நிலையத்திலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டும் உள்ளன என விமான நிலைய அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இதன்படி, கடந்த 24 மணிநேரப் பகுதியில் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் மொத்தம் 21 பயணிகள் விமான சேவைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இவற்றின் மூலமாக மொத்தம் ஆயிரத்து 118 பயணிகள் தமக்கான சேவைகளை பெற்றுக் கொண்டுள்ளனர் என விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# கோட்டாபயவை போன்று என்னால் முடியாது வெளிப்படையாக ஒத்துக்கொண்டார் மஹிந்தர்!



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பணியாற்றுவதைப் போன்று, தன்னால் பணியாற்ற முடியாது என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பேருவளை பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே பிரதமர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தனதுரையில் மேலும் தெரிவிக்கையில் -

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நாளொன்றுக்கு 15 மணித்தியாலங்கள் பணிபுரியும் தலைவர்.

ஜனாதிபதி, அனைத்து உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் அனைத்து நிறுவனங்கள் தொடர்பிலும் புரிந்துணர்வுடன் பணியாற்றி வருகிறார் என அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி இவ்வாறு பணியாற்றுகின்றமையால், நாம் அதிலிருந்து பயனைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

அரசாங்கமொன்றை ஸ்தாபித்ததன் பின்னர், அந்த அரசாங்கத்திடமிருந்து வேலை வாங்க வேண்டியது மக்களின் பொறுப்பு என தான் நினைக்கிறார் என அவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கைக்கு ஆதரவாக 47 நாடுகள் செயற்படும்!

## வீரசேகரவின் அசகாய நம்பிக்கை இது



ஒருமித்தநாட்டின்கொள்கைகளை மாணவர்களுக்குஆரம்பத்தில்இருந்து கற்றுக்கொடுக்க வேண்டும். விடுதலைப் புலிகள் அமைப்பு யுத்தத்தில் வெற்றி பெற்று நாடு பிரிக்கப்பட்டிருந்தால் பௌத்த சாசனம் முற்றாக அழிக்கப்பட்டிருக்கும். ஐக்கியநாடுகள் மனித உரிமை கூட்டத்தொடரில் இம்முறை இலங்கைக்கு ஆதரவாக 47 இற்கும் அதிகமான நாடுகள் ஒன்றிணைந்துசெயற்படும்எனபொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியல் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

மேலும், நல்லாட்சி அரசாங்கம் நாட்டை அரசமைப்பின் ஊடாக பிளவுபடுத்த பல நடவடிக்கைகளை முன்னெடுத்தது. அதற்குநாங்கள்இடமளிக்கவில்லை. ஒற்றையாட்சி நாட்டுக்குள் ஒரு சட்டம் மாத்திரமே செயற்படுத்தப்பட வேண்டும். அனைத்து இன மக்களும் பொது சட்டத்துக்கு அடிபணிய வேண்டும்.

ஒருமித்த நாட்டின் கொள்கையை மாணவர்களுக்கு ஆரம்ப காலத்தில் இருந்து கற்றுக் கொடுக்க வேண்டும். நாட்டின் இறையாண்மை, சுயாதீனத் தன்மை ஆகியவை தொடர்பில் இளம் தலைமுறையினர் அதிக அக்கறை கொள்ள வேண்டும். பாரிய போராட்டத்துக்கு மத்தியில் நாடு பாதுகாக்கப்பட்டுள்ளது.

தற்போதைய இளம் சந்ததியினர் நாடு குறித்து பற்றில்லாமல் செயற்பட்டால் எதிர்காலத்தில் பிரிவினைவாதம் நாட்டை பிளவுபடுத்தும். விடுதலைப் புலிகள் அமைப்பு யுத்தத்தில் வெற்றி பெற்றிருந்தால் நாடு பிளவுபட்டிருக்கும். அத்துடன் பௌத்த சாசனமும் முற்றாக அழிக்கப்பட்டிருக்கும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்பட்ட பிரேரணைக்கு நல்லாட்சி அரசாங்கம் இணை அனுசரனை வழங்க இணக்கம் தெரிவித்தமை தேசத் துரோக செயற்பாடாகக் கருதப்படும். இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட பிரேரணைக்கு இலங்கை அரசாங்கம் சார்பாக செயற்பட்டமையால் மனித உரிமை பேரவையின் உறுப்பு நாடுகள் இலங்கைக்கு ஆதரவாகச் செயற்படவில்லை.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர் 30/1 பிரேரணையில் இருந்து அரசாங்கம் உத்தியோகபூர்வமாக விலகியது. நாட்டுக்கு எதிரான பிரேரணைகளுடன் இணைந்திருக்க வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு கிடையாது. - என்றார்.

# அரசியல் அச்சுறுத்தலுக்கு நான் பயப்படுபவன் அல்லன்!

## விமல் வீராவேசம்



கொழும்பு, ஜன. 16

அரசியல் ரீதியாகவும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பலப்படுத்துவது அவசியம் என அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அரசியல் சவால்கள் மற்றும் அச்சுறுத்தல்களுக்கு தாம் பயப்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# நாமல் உட்பட சிலருக்கு அழைப்பாணை விடுப்பு!



விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ உட்பட சிலருக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

கிரிக்கெட் நிறுவனத்தினத்துக்கு புதிய யாப்பு ஒன்றை தயாரிக்குமாறு தாக்கல் செய்த மனு தொடர்பில் கருத்து தெரிவிப்பதற்காக மார்ச் மாதம் 15 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# வித்தியாசமான துப்பாக்கியை கைப்பற்றினர் பொலிஸார்!

மொனராகல பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது ரி56 ரக தோட்டாக்களை பயன்படுத்தக்கூடிய உள்நாட்டு துப்பாக்கி ஒன்றைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்ட துப்பாக்கிகளை விட வித்தியாசமான முறையில் ஒரே நேரத்தில் தோட்டாக்களை பயன்படுத்தக்கூடிய துப்பாக்கி ஒன்றே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் வெல்லவாய பகுதியை சேர்ந்த 25 வயதுடைய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

# இலங்கைத் தமிழரசுக் கட்சியை சரிவிலிருந்து மீட்க வேண்டும்!

## சிரேஷ்ட துணைத் தலைவர் பொன் செல்வராசா



மட்டக்களப்பு, ஜன. 16

எமது கட்சிக்கு ஏற்பட்டுள்ள சரிவைச் சரிப்படுத்த வேண்டிய பொறுப்பு எம்மிடத்திலேதான் இருக்கின்றது என தமிழரசுக் கட்சியின் முதன்நிலையிலுள்ள சிரேஷ்ட துணைத் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பொன்.செல்வராசா தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில் கட்சியின் எதிர்காலச் செயற்பாடுகள் மற்றும் நிகழ்கால அரசியல் நிலைமைகள் தொடர்பிலான எழுச்சிப் பட்டறை கடந்த ஞாயிற்றுக்கிழமை தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா தலைமையில் மட்டக்களப்பு வாசிகசாலை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், ஞா.சிறிநேசன், கனகசபை, முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் மா.நடராசா, மாநகர முதல்வர் தி.சரவணபவன், உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வாலிபர் முன்னணித் தலைவர் கி.சேயோன் மற்றும் கட்சியின் பிரதேசக் கிளைகளின் பிரதிநிதிகள், வாலிபர் முன்னணியினர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பில் முதன்முறையாக மேற்கொள்ளப்படுகின்ற இந்த எழுச்சிப் பட்டறையில் கட்சியின் செயற்பாடுகள், மீளாய்வு நடவடிக்கைகள், கட்சியின் விதிகள், கொள்கைகள், கோட்பாடுகள், வரலாறு போன்றன தொடர்பிலும் கலந்துரையாடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பொன்.செல்வராசா தலைமையுரையாற்றுகையில் -

கடந்த காலங்களில் எமது கட்சி சரிவுநிலையை எய்தியதென்பது அனைவருக்கும் தெரியும். அந்த அளவில் இந்தக் கட்சிகளின் செயற்பாடுகளை எவ்விதத்தில் நாங்கள் திருத்திக் கொள்ளலாம், மீளாய்வு செய்துகொள்ளலாம் என்பன தொடர்பில் ஆராய்ந்ததன் அடிப்படையில் எமது குழுவின் பரிந்துரைக்கு அமைவாகவும், எமது செயற்பாடுகளை எமது தலைவர்களுக்குத் தெரியப்படுத்துவதற்காகவுமே இந்த எழுச்சிப் பட்டறை செயற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது.

அதற்கப்பால் எமது உறுப்பினர்கள் கட்சியின்மேல் பற்றுக் கொண்டிருந்தாலும், சிலர் கட்சியின் விதிகள், கொள்கைகள், வரலாறு போன்றவை தெரியாதவர்களாகவும், இதுவரை கட்சி சாதித்தது என்ன என்பதை அறியாதவர்களாகவும் இருக்கின்றார்கள். எனவே, எமது கட்சியின் செயற்பாடுகள் அனைத்தும் எமது கட்சியிலுள்ளவர்கள் அறிந்திருக்க வேண்டும் என்பதற்காகவே விசேடமாக இந்தச் செயலமர்வை நாங்கள் மேற்கொண்டுள்ளோம்.

எமது கட்சிக்கு ஏற்பட்டுள்ள சரிவைச் சரிப்படுத்த வேண்டிய பொறுப்பு எம்மிடத்திலே தான் இருக்கின்றது. நாங்கள் நினைத்தால் செய்ய முடியாதது ஒன்றுமில்லை. நாம் உறுப்பினர்களாக இருந்தாலும், ஒவ்வொருவரும் எமது கட்சியின் தலைவர்களாகவே இருக்கின்றோம். எமது விசேட தலைவர்கள் கட்டளைகளைப் பிறப்பித்தாலும், உள்ளூர்த் தலைவர்களாகிய நாங்கள் செயற்பாடற்றவர்களாக இருந்தால் எமது கட்சி செயலற்றதாகிவிடும் என்ற அடிப்படையில் எம் அனைவரதும் ஒத்துழைப்பும் எமது கட்சியின் வளர்ச்சிக்குத் தேவையாக இருக்கின்றது. - என்று தெரிவித்தார்.

## மேலும் 715 பேர் பூரண குணமடைவு!

இலங்கையில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களுள் நேற்று திங்கட்கிழமை மேலும் 715 பேர் பூரணமாகக் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களில் 69 ஆயிரத்து 411 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

இதேவேளை, கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோர் எண்ணிக்கை 397 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## யாழ். குடாநாட்டு தீவு விவகாரம்: இந்திய எதிர்ப்புக்கு சீனா பதிலடி

கொழும்பு, ஜன. 16

யாழ்.குடாநாட்டுக்கு அருகிலுள்ள மூன்று தீவுகளில் சூரிய மின் உற்பத்தி நிலையங்களை அமைப்பது தொடர்பில் சர்வதேச விலை மனுகோரல் நடைமுறைகளுக்கு அமையவே இந்த ஒப்பந்தம் சீன நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளதாக சீனத் தூதரகத்தின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இது முற்றிலும் வர்த்தக ரீதியான ஒப்பந்தம், சீனாவின் தனியார் நிறுவனத்துக்கே இந்த ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது எனவும் அந்த ஊடகப் பேச்சாளர் கூறியுள்ளார்.

குறித்த மூன்று தீவுகளில் சூரிய மின் உற்பத்தி நிலையங்களை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்தை சீன நிறுவனத்திற்கு வழங்கியமை தொடர்பாக இந்தியா எதிர்ப்பு தெரிவித்த நிலையிலேயே இலங்கையில் உள்ள சீனத் தூதரகம் மேற்கண்டவாறு பதிலளித்துள்ளது.

எந்த நாடாக இருந்தாலும் நிறுவனம் ஒன்றின் சட்ட ரீதியான உரிமைகளை பாதுகாப்பது முக்கியமானது என சீனத் தூதரகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## பொத்துவில் - அக்கரைப்பற்று பிரதான வீதியில் விபத்து!

### ஒருவர் பரிதாப சாவு



பொத்துவிலில் இருந்து அக்கரைப்பற்று நோக்கி சென்ற வான் ஒன்று முன்னால் வந்த வேளாண்மை இயந்திரத்தை ஏற்றி வந்த உழவு இயந்திரத்துடன் மோதியதில் வான் சாரதி சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை தாண்டியடி பிரதேச வளைவில் பி.ப.3.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

அக்கரைப்பற்று பிரதேச சாரதி பயிற்சி நிலைய வான் ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்நிலையில் சம்பவஇடத்துக்கு விரைந்த 1990 சுவசரிய அவசர சேவை, பொத்துவில் பொலிஸார் மற்றும் பொது மக்கள் இணைந்து வானில் அகப்பட்ட சடலத்தை மீட்டனர். மேலதிக நடவடிக்கைக்காக பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் சடலம் வைக்கப்பட்டு தற்போது உறவினர்களிடம் அது ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து குறித்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொத்துவில் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## வெட்டுப்புள்ளி சிக்கல் அறிக்கை ஜனாதிபதி செயலகம் சென்றது!

கொழும்பு, ஜன. 16

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான வெட்டுப்புள்ளி சிக்கல்கள் சம்பந்தமாகக் கல்வி அமைச்சால் தயாரிக்கப்பட்ட அறிக்கை ஜனாதிபதி செயலகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அது தொடர்பில் தெரிவித்துள்ள கல்வியமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா -

கல்வி அமைச்சின் அறிக்கையை ஆராய்ந்த பின்னர் ஜனாதிபதி செயலகத்தால் மேற்படி சிக்கல்களுக்குத் தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

அதுவரை புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை ஆறாம் தரத்துக்கு இணைத்துக்கொள்ளும் நடவடிக்கைகள் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் வெட்டுப் புள்ளிகளை குறைப்பதில் காணப்படும் பிரச்சினைகள் மற்றும் அதனைத் தவிர்ப்பதற்கு மேற்கொள்ளவேண்டிய செயற்பாடுகள் தொடர்பில் கல்வி அமைச்சின் அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் வகுப்புகளில் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது வெட்டுப்புள்ளி தொடர்பான பிரச்சினைக்கு தீர்வாகாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## இலங்கையை மீண்டும் மிரட்டுகிறது மலேரியா!

இலங்கையில் ஒரு வாரத்திற்குள் மூன்று மலேரியா நோயாளிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர் என சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை 2016 ஆம் ஆண்டு மலேரியா இல்லாத நாடாக அறிவிக்கப்பட்டது.ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளில் வெளிநாடுகளில் இருந்து வந்தவர்களால் மலேரியா நோயாளர்கள் கண்டு பிடிக்கப்பட்டனர்.

கண்டுபிடிக்கப்பட்ட மூன்று மலேரியா நோயாளிகளும் ஆபிரிக்க நாடுகளில் இருந்து வருகை தந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அவர்கள் இலங்கைக்கு வந்தவேளை தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட நிலையில் மலேரியா இருக்கின்றமை கண்டுபிடிக்கப்பட்டது.

இவர்கள் மூவரும் பொரலஸ்கமுவ, பேருவல, மற்றும் ஹொரன பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. இலங்கையில் கடந்த ஆண்டு சுமார் 30 மலேரியா நோயாளிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தினம் ஒரு விவசாயத் தகவல்

Agriculture Information

### பப்பாளி மருத்துவ பயன்கள்



பொதுவாக, மலம் சிக்கல் இன்றி வெளியேறினாலே, பெரும்பாலான நோய்களைத் தள்ளி வைக்க முடியும். இதற்கு கைகொடுக்கிறது பப்பாளி. இது மிகச்சிறந்த மலமிளக்கி.

மலச்சிக்கல் பிரச்சினை உள்ளவர்கள், அடிக்கடி பப்பாளி சாப்பிட்டு வந்தால் நல்ல பலன் கிடைக்கும். அடிவயிற்றுப் பிரச்சினைகளுக்கு பப்பாளி மிகச்சிறந்த மருந்தாகிறது. வயிற்றுக்கடுப்பு, செரிமானமின்மை, அமிலத்தொல்லை போன்ற வற்றுக்கும் பப்பாளி நிவாரணம் தரும்.

பப்பாளி, பித்தத்தைப் போக்குவதோடு உடலுக்கும் தெம்பூட்டக் கூடியது. கல்லீரல் கோளாறுகளையும் பப்பாளி சரிசெய்ய வல்லது. சீரற்ற மாதவிலக்கு உள்ள பெண்களுக்கு இப்பழம் அருமருந்து. பப்பாளியில் உள்ள ‘பப்பாயின்’ என்சைம்களில் ‘ஆர்ஜினைன்’ என்ற மூலப்பொருள் உள்ளது. அது ஆண்களுக்கான உயிர் உற்பத்தித் திறனை மேம்படுத்த உதவும். மேலும், ‘கார்பின்’ இருதயத்துக்கும் ‘ஃபைப்ரின்’ ரத்தம் உறைதலுக்கும் உதவுகின்றன.

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

# இறுதிப்போரில் கொல்லப்பட்டவர்கள் புலிகளே தவிர பொதுமக்கள் அல்லர்!

## இப்படிக் கூறுகின்றார் அமைச்சர் சரத் வீரசேகர



இலங்கையில் இறுதிப் போரில் கொல்லப்பட்டவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளே தவிர பொதுமக்கள் அல்லர்.

- இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரானது மனித உரிமைகள் சட்டத்தின் கீழ் கண்காணிக்கப்படாது, மாறாக மனிதாபிமான சட்டத்தின் கீழேயே கண்காணிக்கப்பட வேண்டும்.

இந்தச் சட்டத்துக்கு அமைய விடுதலைப்புலிகளுக்கு உதவிய அனைவரும் 'விடுதலைப் புலிகள்' என்றே கருதப்படுவார்கள்.

இலங்கையில் இடம்பெற்றது உள்நாட்டு ஆயுதப்போராட்டம். விடுதலைப் புலிகளுக்கென இராணுவக் கட்டமைப்பொன்று இருந்ததுடன் கடற்படை, விமானப்படைகள் என்பனவும் இருந்தன.

அத்தோடு தமக்கான தேசமொன்று அவர்களின் கட்டுப்பாட்டில் இருந்தது. தொடர்ச்சியாக போராடக்கூடிய தன்மையும் அவர்களிடம் காணப்பட்டது.

மேலும் இரு நாடுகளுக்கு இடையில் நடக்கும் சண்டையாக இல்லாது, ஒரு நாட்டுடன் நடத்தும் போராட்டத்துக்கு ஒப்பானது இந்த ஆயுதப் போராட்டம்.

இந்தப் போராட்டம் தொடர்பில் மனிதாபிமான சட்டமே நடைமுறைப்படுத்தப்படவேண்டுமே தவிர மனித உரிமை மீறல் சட்டமல்ல.

அதனடிப்படையில் மனிதாபிமான சட்டத்தில் விடுதலைப்புலிகளுக்கு உதவிய அனைவருமே விடுதலைப் புலிகளே. அதன்படி இறுதிப்போரில் கொல்லப்பட்டவர்கள் விடுதலைப்புலிகளே தவிர பொதுமக்கள் அல்லர்.

இதேவேளை, இந்தச் சட்டத்தை முதலில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் தெரிந்துகொள்ள வேண்டும் - என்றார்.

## ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில்

# வழக்குத் தொடர 30 பேரின் தகவல் சட்டமா அதிபருக்கு அனுப்பிவைப்பு

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் 30 பேருக்கு எதிராக வழக்கு நடவடிக்கைகளை முன்னெடுக்கும் வகையில் அவர்கள் தொடர்பான தகவல்கள் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

- இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

மனித கொலைகள் மற்றும் சூழ்ச்சிகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டுகளின் கீழே இவர்களுக்கு எதிராக வழக்கு தொடரப்படவுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

30 பேரினதும் தகவல்கள் அடங்கிய அறிக்கை கிடைத்ததும் சட்டமா அதிபர், அவர்களுக்கு எதிராக குற்றப்பத்திரங்களைத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுப்பார் எனவும் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பாக விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையின் பிரதியை வழங்குமாறு சட்டமா அதிபர் தப்புல டி லிவேரே, ஜனாதிபதியின் செயலாளரிடம் கடந்த வெள்ளிக்கிழமை கோரிக்கை விடுத்திருந்தார்.

இது தொடர்பாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகரவிடம் கேட்டபோதே அவர், குறித்த தகவல்கள் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று கூறினார்.

2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தில் இடம்பெற்ற தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை நடத்துவதற்காக அதே ஆண்டு செப்ரெம்பர் மாதம் 22ஆம் திகதி, அப்போதிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் விசேட ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

இந்த ஆணைக்குழு, தமது இறுதி அறிக்கையை இம்மாதம் முதலாம் திகதி தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் ஒப்படைத்திருந்தது.

இதில், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர ஆகியோர் மீதும் குற்றவியல் குற்றச்சாட்டுக்களை சுமத்துமாறு ஜனாதிபதி ஆணைக்குழு பரிந்துரை செய்துள்ளன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# அடுத்து வரும் சில மாதங்கள் இலங்கைக்கு நெருக்கடி

## இராஜாங்க அமைச்சர் கப்ரால் ஆரூடம்



அடுத்துவரும் சில மாதங்கள் இலங்கைக்கு பொருளாதார ரீதியில் நெருக்கடியான காலமாக இருக்கும் என்று நிதி, மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக ஏற்பட்டுள்ள பின்னடைவிலிருந்து நாடு இன்னமும் மீண்டு வந்து கொண்டிருக்கின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஒவ்வொரு ஆண்டும் 4 லட்சம் புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்க வேண்டியுள்ளன எனத் தெரிவித்த அவர், அதற்காகத் தாம் செயற்படுவதாக வும் கூறினார்.

இதன் காரணமாகவே தாம் புதிய முதலீட்டாளர்களைக் கொண்டுவருவதாக வும் அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் மேலும் தெரிவித்தார்.

# இராணுவத்துக்கு ஆபத்து ஏற்பட இடமளிக்கமாட்டேன்

## பொன்சேகா எம்.பி. திட்டவட்டம்



கொழும்பு, பெப். 15

இலங்கை இராணுவத்தினரைக் காட்டிக்கொடுப்பதற்கோ அவர்களுக்கு ஆபத்து ஏற்படுவதற்கோ இடமளிக்க மாட்டேன்.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன் சேகா தெரிவித்தார்.

இலங்கைக்கு எதிரான ஐ.நா. தீர்மானம் தொடர்பில் பெலியத்த பகுதியில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேசிய கொள்கைகளுக்கமைய எந்தவொரு அரசும் நாட்டின் இராணுவத்தினரைக் காட்டிக்கொடுப்பதில்லை.

குறிப்பாக வடக்கிலுள்ள அரசியல்வாதிகள் வாக்குகளை எதிர்பார்த்தே அவர்களுடைய நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றனர். அவற்றை வைத்துக் கொண்டு தெற்கில் இனவாதத்தை ஏற்படுத்த வேண்டிய அவசியமில்லை - என்றார்.

# பொருத்தமான தடுப்பூசியைப் பெற ராஜபக்ஷ அரசுக்கு திராணியில்லை

## சாடுகின்றார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



கொழும்பு, பெப். 15

இலங்கைக்குப் பொருத்தமான கொரோனாத் தடுப்பூசியை மக்களுக்குப் பெற்றுக்கொடுக்க தற்போதைய அரசால் முடியவில்லை என்று எதிர்க் கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டினார்.

அம்பாந்தோட்டையில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் வழங்கப்படும் 'ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ரா ஜெனிகா' என்ற கொரோனாத் தடுப்பூசியால் நாட்டில் பரவி வரும் புதிய கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த முடியுமா?

கொரோனாத் தடுப்பூசி வழங்குவது தொடர்பாக அரசுக்கு எந்தத் திட்டமும் இல்லை.

நாட்டுக்குப் பொருத்தமான கொரோனாத் தடுப்பூசியை மக்களுக்குப் பெற்றுக் கொடுக்க தற்போதைய அரசால் முடியவில்லை.

அரசு ஒரு கேளிக்கையான தொலைக்காட்சி நாடகத்தை நடத்துகின்றது. இதன் இயக்குநர் பந்துல குணவர்தன - என்றார்.

# இலங்கையில் ஜனாதிபதி தேர்தல் வேண்டாம்!

## கம்மன்பிலவின் கட்சி யோசனை முன்வைப்பு

ஒற்றையாட்சியைப் பலவீனப்படுத்தக்கூடிய எந்த வொரு சரத்தும் புதிய அரசமைப்பில் உள்ளடக்கப்படக்கூடாது என்று அமைச்சர் உதய கம்மன்பில தலைமையிலான புதிய ஹெல உறுமய யோசனை முன் வைத்துள்ளது.

புதிய அரசமைப்பு எவ்வாறு அமையவேண்டும் எனக் குறிப்பிட்டு நிபுணர் குழுவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள அறிக்கையிலேயே குறித்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போது தமது கட்சியால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் குறித்து அமைச்சர் உதய கம்மன்பில விளக்கமளித்தார்.

இதன்போது அவர் கூறியவை வருமாறு:-

நாட்டின் தற்போதைய பெயர் 'இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு' என்றுள்ளது . ஜனநாயகம், சோசலிசம் என்பன சொல்லளவில் அல்லாமல் செயலில் இருக்கவேண்டும். எனவே, நாட்டின் பெயர் 'இலங்கை குடியரசு' என இருக்க வேண்டும் என யோசனை முன் வைக்கப்பட்டுள்ளது.

பூகோள ரீதியில் இலங்கையின் அமைவிடம் முக்கியம். நாட்டை பலவீனப்படுத்துவதற்கான முயற்சிகள் 500 ஆண்டுகளுக்கு மேலாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எனவே, ஒற்றையாட்சியைப் பலவீனப்படுத்தும் எந்தவொரு சரத்தும் உள்ளடக்கப்படக்கூடாது.

குறிப்பாக சிங்களத்தில் ஏக்கிய ராஜ்ய என்பது தமிழில் 'ஒற்றையாட்சி' எனவும், ஆங்கிலத்தில் 'யுனிட்டரி' எனவும் இருக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் சொல்லை தூக்கிப்பிடித்து சமஷ்டி முறைமையை வலியுறுத்துவதற்கு சிலர் முயற்சிக்கக்கூடும்.

பௌத்த மதம் இலங்கை அரச மதமாக வேண்டும். அதேவேளை, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்படவேண்டும். ஆனால், நாடாளுமன்றத்துக்கு பொறுப்புக்கூறவேண்டியவராக ஜனாதிபதி இருக்கவேண்டும். அரச பாதுகாப்பு தொடர்பில் எடுக்கப்பட்ட தீர்மானத்தைதவிர, ஜனாதிபதியால் எடுக்கப்படும் சர்ச்சைக்குரிய தீர்மானங்களை நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தக் கூடியதாக இருக்கவேண்டும்.

ஜனாதிபதித் தேர்தல் அவசியமில்லை. நாடாளுமன்றத் தேர்தலின்போதே கட்சிகள் ஜனாதிபதி வேட்பாளரை அறிவிக்க வேண்டும். வெற்றிபெறும் கட்சியில் இருந்து ஜனாதிபதி பதவி வகிப்பார். அத்துடன், ஜனாதிபதி பதவியை வகிப்பதற்கான காலவரையறை நீக்கப்பட வேண்டும்.

6 மாதங்களுக்கு ஒரு தடவை ஜனாதிபதியின் செயற்பாடு தொடர்பில் நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்த வேண்டும். அந்த விவாதத்தில் ஜனாதிபதி பதிலளித்து உரையாற்ற வேண்டும். அதேபோல ஜனாதிபதி நடவடிக்கை தொடர்பில் பிரதியமைச்சு பதவியொன்றும் உருவாக்கப்படவேண்டும்.

நாட்டில் நடைமுறையில் உள்ள தனியார் மற்றும் பிரதேச சட்டங்கள் நீக்கப்பட்டு, ஒரே நாடு, ஒரே சட்டம் என்ற முறை அமுலுக்கு வரவேண்டும். இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டுள்ளவர்கள் அரசு மற்றும் அரச நிறுவனங்களில் உயர்பதவிகள் வகிப்பது தடைசெய்யப்பட வேண்டும் - என்றார்.

# வடக்கில் தரம் 1 இல் இணையும் மாணவரின் எண்ணிக்கை வீழ்ச்சி

## பிறப்பு வீதக் குறைவே காரணமாம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், பெப். 16

வடக்கு மாகாணத்தில் தரம் 1இல் இணையும் மாணவர்களின் எண்ணிக்கை 2020 ஐ விடவும் 2021இல் ஆயிரத்திற்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் வீழ்ச்சி கண்டுள்ளதாக சுட்டிக் காட்டப்படுகின்றது.

தமிழ் மக்களின் பிறப்பு வீதம் தொடர்ந்தும் குறைவடைவதாக தெரிவிக்கப்பட்டு வரும்போது தரம் 1இல் இணையும் மாணவர்களின் எண்ணிக்கையும் இதனை உறுதி செய்கின்றது.

2020ஆம் ஆண்டில் வடக்கின் 5 மாவட்டங்களிலும் 16 ஆயிரத்து 820 மாணவர்கள் தரம் 1இல் இணைந்தபோதும் 2021இல் 15 ஆயித்து 703 மாணவர்களே தரம் 1இல் இணைந்துள்ளனர்.

இவ்வாறு இணைந்த மாணவர்களில் உச்சபட்ச விழுக்காட்டை கொண்ட மாவட்டமாக முல்லைத்தீவு மாவட்டம் காணப்படுகின்றது. இங்கே 2020ஆம் ஆண்டில் 2 ஆயிரத்து 82 மாணவர்கள் தரம் 1இல் இணைந்தபோதும் 2021இல் ஆயிரத்து 491 மாணவர்கள் மட்டும் இணைந்ததன் மூலம் இந்த ஆண்டில் 511 மாணவர்கள் குறைந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 2020ஆம் ஆண்டு 8 ஆயிரத்து 157 மாணவர்கள் இணைந்த நிலையில் 2021 ஆம் ஆண்டில் 8 ஆயிரத்து 55 மாணவர்கள் மட்டுமே இணைந்துள்ளனர். 102 மாணவர்கள் குறைவடைந்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 2020ஆம் ஆண்டு ஆயிரத்து 841 மாணவர்கள் இணைந்தபோதும் 2021 ஆம் ஆண்டில் ஆயிரத்து 656 மாணவர்கள் மட்டுமே இணைந்துள்ளனர். இதன் மூலம் மாணவர்கள் எண்ணிக்கை 185 ஆல் குறைவடைந்துள்ளது.

வவுனியா மாவட்டத்தில் 2020ஆம் ஆண்டு 2ஆயிரத்து 686 மாணவர்கள் இணைந்த நிலையில் 2021ஆம் ஆண்டில் 2 ஆயிரத்து 433 மாணவர்கள் மட்டுமே இணைந்துள்ளதன் மூலம் 253 மாணவர்கள் குறைவடைந்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் 2020ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 54 மாணவர்கள் இணைந்த நிலையில் 2021 ஆம் ஆண்டில் ஆயிரத்து 968 மாணவர்கள் மட்டுமே இணைந்துள்ளதன் மூலம் 86 மாணவர்கள் குறைவடைந்துள்ளனர்.

இவ்வாறு வடக்கு மாகாணத்தின் பிறப்பு விதம் குறைவடைவதனை எடுத்துக் காட்டும் இந்த புள்ளிவிவரம் எதிர்காலத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் நிலைமைக்கான குறியீடு எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

# ஊடகவியலாளர்களுக்கு பாதுகாப்பு அங்கிகள் வழங்கி வைக்கப்பட்டன!



யாழ்ப்பாணம் மாவட்ட இடர்முகாமைத்துவ பிரிவும் கியூமெடிக்கா நிறுவனமும் இணைந்து ஊடகவியலாளர்களுக்கு தனிநபர் பாதுகாப்பு அங்கிகள் வழங்கிவைக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முற்பகல் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஊடகவியலாளர்களுக்கு இந்த தனிநபர் பாதுகாப்பு அங்கிகள் வழங்கப்பட்டன.

இடர் நிலைமைகளின் போது தம்முடன் இணைந்து காத்திரமான பங்களிப்பை வழங்கும் ஊடகவியலாளர்களின் சேவையை கொரோனா வைரஸ் பரவல் நிலைமையில் மேலும் வலுப்படுத்தும் முகமாக இந்த தனிநபர் பாதுகாப்பு அங்கிகள் வழங்கப்பட்டன என்று இடர் முகாமைத்துவ நிலையத்தின் யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பணிப்பாளர், ரி.என்.சூரியராஜா தெரிவித்தார்.

# முஸ்லிம்களின் அபிப்பிராயங்களை கேட்காத தமிழ் கட்சிகளை எவ்வாறு நம்புவது - புர்க்கான்

முஸ்லிம்கள் தொடர்பாக அபிப்பிராயங்களைக் கேட்காத தமிழ்க் கட்சிகளை நம்பி எவ்வாறு வடக்கு - கிழக்கை இணைக்க ஆதரவு வழங்குவது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கல்முனை இணைப்பாளர் அஹமட் புர்க்கான் கேள்வி எழுப்பியுள்ளார்.

கல்முனையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். குறித்த ஊடக சந்திப்பில் அஹமட் புர்க்கான் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

அரசாங்கத்தின் மீதான சிறுபான்மையினரின் தவறான புரிதல் காரணமாகதான், சாணக்கியனுக்கு பின்னால் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி பேர ணிக்கு சகல தரப்பினரும் ஆதரவளித்திருக்கின்றமை என்பது மிக வெட்டவெளிச்சமான உண்மையாகும்.

இதில் தமிழ் மக்களுடன் இணைந்து முஸ்லிம் மக்கள் போராட்டத்தை நடாத்துகின்றபோது சிறுபான்மை சமூகத்தில் ஒற்றுமை இடம்பெற்றதாக சிலர் விமர்சனத்தை எழுப்புகின்றார்கள். இங்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் இருவரும் இந்தப் பேரணிக்கு ஆதரவு வழங்குமாறு கேட்டிருந்தார்கள்.

உண்மையில் இந்தப் பேரணியின் பின்னணி என்ன என்பதை புரிந்து கொள்ளாமல் அரசியல் வங்குரோத்து நிலைமையை சீர்செய்வதற்காக இந்தக் காலகட்டத்தில் அரசாங்கத்துக்கு எதிராக முஸ்லிம்களையும் தமிழர்களையும் சீண்டி விட்டிருக்கின்றார்கள் என்பதை எம்மால் அவதானிக்க முடிகின்றது. இப்பேரணியால் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகம் எவ்வித நன்மைகளையும் அடையவில்லை என்பதே எமது கருத்தாகும்.

இந்தப் பேரணி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இழந்த செல்வாக்கை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கான ஒரு நாடகமாகவே பார்க்கின்றோம். இந்தப் போராட்டம் வெற்றி பெற்றதா இல்லையா என்பது இறுதிநாளில் விரிசல் ஏற்பட்டு இரு பிரிவினராகச் செயற்பட்ட சம்பவம் அங்கு பதிவாகியுள்ளது.

முஸ்லிம் தமிழர்களின் ஒற்றுமையை பலப்படுத்த வேண்டும் என்பதில் எமக்கு மாற்றுக்கருத்தில்லை. அத்துடன் புதிய அரசியல் சீர்திருத்தத்திற்காக அரசாங்கம் கேட்டுக்கொண்ட ஆலோசனைகளை இதுவரை முஸ்லிம்களை பிரதிநிதித்துவபடுத்துகின்ற கட்சிகள் சமர்ப்பிக்கவில்லை.

அதேபோன்று தமிழ் கட்சிகளை சார்ந்தோர் ஆலோசனைகளை முன்வைத்திருந்தார்கள். ஆனால் இவர்கள் இப்பேரணியில் வடக்கு - கிழக்கு இணைய வேண்டும் என கூறியே ஆரம்பித்திருந்தார்கள். அந்தவகையில் முஸ்லிம்கள் குறித்து அபிப்பிராயங்களை கேட்காத தமிழ்க் கட்சிகளை நம்பி எவ்வாறு வடக்கு - கிழக்கினை இணைக்க ஆதரவு வழங்குவது என்ற கேள்வி எழுகின்றது. - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கைக்கு கடத்தப்பட இருந்த 30 கிலோ மூக்கு பொடிப் பொதிகள்

## மண்டபம் குயவன்தோப்புக் கடற்கரையில் மீட்பு





(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், பெப்.16

இலங்கைக்கு கடத்தப்பட இருந்த 30 கிலோ எடையுடைய மூக்கு பொடிப் பொதிகள் இந்தியாவின் மண்டபம் சுங்கத்துறையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தியாவின் மண்டபம் அருகே உள்ள வேதாளை கடற்கரையில் இருந்து இலங்கைக்குக் கடத்தப்பட இருந்த 30 கிலோ மூக்குப் பொடி பொதிகள் மண்டபம்,சுங்கத்துறை அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இக்கடத்தல் முயற்சியுடன் தொடர்புடையவர்களை கடலோர காவல் குழுமப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

நான்கு வருடத்திற்கு பின் மீண்டும் ராமநாதபுரம் மாவட்ட கடற்கரையில் இருந்து மூக்குப் பொடிகள் இலங்கைக்கு கடத்த இருந்த சம்பவம் உளவுத்துறை மற்றும் கடலோரா பாதுகாப்பு குழும அதிகாரிகள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது .

ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் அருகே உள்ள வேதாளை குயவன் தோப்பு பகுதியில் இருந்து இலங்கைக்கு மூக்கு பொடி பொதிகள் கடத்த இருக்கின்றன என ராமேஸ்வரம் சுங்கத்துறை கண்காணிப்பாளர் சுரேஷ்க்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து சுங்கத்துறை அதிகாரிகள்; குழுக்களாக பிரிந்து வேதாளை கடற்பகுதியில் ரோந்து மேற்கொண்டனர்.

அப்போது வேதாளை குயவன் தோப்பு கடற்கரையில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நின்று கொண்டிருந்த நாட்டுப்படகு ஒன்றை சோதனை செய்ய முற்பட்டபோது சுங்கத்துறை அதிகாரிகள் வருவதை கண்ட கடத்தல் காரர்கள் இரண்டு பொதிகளை கடற்கரையில் தூக்கி வீசி விட்டுத் தப்பி சென்றனர்.

கடற்கரையில் இருந்து மீட்கப்பட்ட 2 பெரிய பொதிகளைக் கைபற்றிய மண்டபம் சுங்கத்துறை அதிகாரிகள் மண்டபத்தில் உள்ள சுங்கத்துறை அலுவலகத்துக்கு அவற்றை எடுத்து வந்தனர். அவ்விரு பொதிகளிலும் 100 அட்டைபெட்டிகளில் சுமார் 30 கிலோ மூக்கு பொடி இருந்துள்ளது.

மேலும் சுங்கத்துறை அதிகாரிகளைக் கண்டதும் தப்பி சென்றவர்களை மண்டபம் கடலோர காவல் குழுமம் மற்றும் உளவுத்துறை அதிகாரிகள் கடற்கரை ஓரக் கிராமங்களில் தேடி வருகின்றனர்.

# மாறுபாடு அடைந்துள்ள புதிய கொவிட்டுக்கு அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசி ஏற்புடையதில்லை



சஜித் தெரிவிப்பு

ஒக்ஸ்போர்ட் - அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசி, மாறுபாடு அடைந்துள்ள புதிய கொவிட் - 19 இற்கு ஏற்புடையதாக இல்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தற்போது பயன்பாட்டுக்கு வந்துள்ள ஒக்ஸ்போர்ட் - அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசி தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக சஜித் பிரேமதாஸ மேலும் கூறியுள்ளவை வருமாறு-

அதாவது, 'ஒக்ஸ்போர்ட் - அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசி தொடர்பாக நடத்தப்பட்ட சோதனையில், மாறுபாடு அடைந்துள்ள புதிய கொவிட் - 19 இற்கு ஏற்புடையதாக இல்லை என்பது தெரிய வந்துள்ளது.

இதேவேளை, இந்தியா நன்கொடையாக வழங்கிய தடுப்பூசிகளைத் தவிர மேலதிகமாக தடுப்பூசிகளைப் பெறுவதற்கு அரசாங்கம் எந்தவொரு நடவடிக்கையையும் இதுவரை மேற்கொள்ளவில்லை.

இந்த நாட்டில் 220 லட்சம் மக்கள் வாழ்கிறார்கள் என்பதையும், 6 லட்சம் தடுப்பூசிகள் மாத்திரமே இலவசமாக வழங்கப்பட்டுள்ளன என்பதையும் கூடுதலாக தடுப்பூசிகள் தேவை என்பதையும் அரசாங்கம் மறந்துவிட்டது.

அத்துடன் மேலதிகமாக தேவைப்படுகின்ற தடுப்பூசிகளை கொண்டுவருவதற்கான எந்த திட்டமும் அரசாங்கத்திடம் இல்லை. எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இந்தியாவை வேண்டுமென்றே அரசு சீண்டிப் பார்க்கின்றது!

## கருணாகரம் எம்.பி. தெரிவிப்பு



வேண்டுமென்றே இந்த அரசாங்கம் இந்தியாவைச் சீண்டுகின்றது. தூரத்துத் தண்ணீர் ஆபத்துக்கு உதவாது என்று சொல்லுவார்கள். இன்னொரு நாட்டுக்கு நட்பாய் இருக்க வேண்டும் என்பதற்காக தெற்காசியாவின் வல்லரசு நாட்டை ஏன் எதிர்க்கவேண்டும். இந்தநாட்டின்நண்பன் யார், எதிரி யார் என்பதை இந்த அரசு புரிந்து கொள்ள வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

இந்தியா தொடர்பில் இலங்கையின் சமகால நிலைப்பாடுகள் சம்பந்தமாகக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்த நாட்டிலே தற்போது என்ன நடக்கின்றது? நான்கு தொழிற்சங்கங்கள் கிழக்கு முனையம் தொடர்பாகப் போராட்டம்நடத்துகின்றனஎன்பதற்காகஇலங்கை, இந்தியா, ஜப்பான் போன்ற மூன்று நாடுகள் சேர்ந்து மேற்கொண்ட ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படுகின்றது. இந்தியா இந்த நாட்டுக்கு எத்தனையோ உதவிகள் செய்திருக்கின்றது. ஜே.வி.பி. காலகட்டத்திலே 1971 ஆம் அண்டு நடந்த கிளர்ச்சியின் போது இந்தியாதான் இந்த நாட்டைக் காப்பாற்றியது. 2009 இல் கூட இங்கு ஆயுதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும் இந்தியா இந்த அரசிற்கு உதவியது. வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் வரை ரயில் தண்டவாளங்களை அமைத்துத் தந்தது.

அதே போல் ஜப்பான் என்பதும் இன்னுமொரு ஜனநாயக நாடு. இந்த நாடாளுமன்றக் கட்டடம் கூட ஜப்பானால் இந்த நாட்டுக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டது. அவ்வாறான நாடுகளை ஏன் வெறுக்கின்றீர்கள்? எதிர்வரும் 22 ஆம் திகதி பாகிஸ்தான் பிரதமர் இந் நாட்டுக்கு விஜயம் மேற்கொள்வதாகவும், 23 ஆம் திகதி அவர் நாடாளுமன்றத்திலே உரையாற்ற இருப்பதாகவும் செய்திகள் மூலம் நாங்கள் அறிகின்றோம். இதன்மூலம் என்ன நடக்கப் போகின்றது?

பாகிஸ்தான் பிரதமர் இங்கு வந்து உரையாற்றும் போது இந்தியாவிற்கு எதிராகத் தான் உரையாற்றப் போகின்றார். வேண்டுமென்றே இந்த அரசாங்கம் இந்தியாவைச் சீண்டுகின்றது. தூரத்துத் தண்ணீர் ஆபத்திற்கு உதவாது என்று சொல்லுவார்கள். இன்னொரு நாட்டுக்கு நட்பாய் இருக்க வேண்டும் என்பதற்காக தெற்காசியாவின் வல்லரசு நாட்டை ஏன் எதிர்க்க வேண்டும் என்பதே என்னுடைய கேள்வி. இந்த நாட்டின் நண்பன் யார், எதிரி யார் என்பதை இந்த அரசு புரிந்து கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.

## சமுர்த்தி பயனாளி தெரிவு புதிய முறை அறிமுகம்!

புதிதாக சமுர்த்தி பயனாளிகளை இணைத்துக்கொள்வதில் அரசியலுக்கு அப்பால் ஒழுங்குமுறையான வேலைத்திட்டம் ஒன்றை அறிமுப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த புதிய நடைமுறையின் கீழ் பல்வேறு காரணங்களால் பிரதேச செயலாளர் மட்டத்தில் வெளியேறும் சமுர்த்தி பயனாளிகளின் குடும்பங்களுக்காகத் தகுதிகளைக் கொண்ட புதிய குடும்ப பயனாளிகள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்..

இதற்கான சுற்றறிக்கை ஒன்று கடந்த 11 ஆம் திகதி வெளியிடப்பட்டது. இதற்கமைவாக விரைவாக புதிய சமுர்த்தி பயனாளிகளை இணைத்துக்கொள்ளும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ளது.

அத்தோடு மார்ச் முதலாம் திகதி தொடக்கம் இவர்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கும் பணி ஆரம்பிக்கப்படும்.

## பயங்கரவாதத்தை ஆதரிக்கும் அமைப்புகள் வடக்கு, கிழக்கில் உருவாகியுள்ளனவாம்!

### அமைச்சர் கெஹலிய கண்டுபிடிப்பு

வடக்கு - கிழக்கில் பயங்கரவாதத்தை ஆதரிக்கும் அமைப்புக்கள் பல உருவாகியுள்ளன என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

கண்டியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடக சந்திப்பில் அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

தேசிய பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்கும் நாடு என்ற ரீதியில் பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்குவதற்கு ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை.

மேலும் வடக்கு மற்றும் கிழக்கில் பயங்கரவாதத்துக்கு ஆதரவு வழங்கும் அமைப்புக்கள் மீண்டும் உருவாகியுள்ளன.

இதேவேளை நல்லாட்சி அரசாங்க காலப்பகுதியில் நாட்டின் புலானாய்வு பிரிவு செயலிழந்து காணப்பட்டமையால் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுக்க வேண்டியேற்பட்டது.

ஆகவேதான் தற்போது புலனாய்வு துறையை மேலும் வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றோம். அதாவது நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படாத வகையில் புலனாய்வு துறையைப் பலப்படுத்துவோம். - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்தில் மேலும் 10 பேருக்கு கொரோனாத் தொற்று!

தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்தில் மேலும் 10 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

மேலும், குறித்த தொற்றாளர்கள் சேவையாற்றிய 6 வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளவர்களுடன் நெருங்கிய தொடர்பில் இருந்தவர்களையும் தனிமைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. இத்தகைய சூழ்நிலையிலும் அங்கு பணியாற்றுகின்ற சிலர் சுகாதார நடவடிக்கைகளைப் பின்பற்றாமல் செயற்படுகின்றமையை அவதானிக்க முடிவதாகப் பலரும் குற்றம் சுமத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கடலட்டை ஏற்றுமதிக் கிராமம் இரணைதீவில் அங்குரார்ப்பணம்

### செய்துவைத்தார் அமைச்சர் டக்ளஸ்



கடலுணவு உற்பத்திக்கான கேந்திர மையமாக இரணைதீவு உருவாக்கப்படும் என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளார்.

இரணைதீவில் நேற்றுமுன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) கடலட்டை ஏற்றுமதிக் கிராமத்தை அங்குரார்ப்பணம் செய்துவைத்து உரையாற்றுகையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய கடற்றொழில் அமைச்சர் -

இரணைதீவு மக்களின் வாழ்கை செழிப்படைய வேண்டும் என்பதே தன்னுடைய எதிர்பார்ப்பு என்று தெரிவித்தமையுடன், கடலட்டை பண்ணையின் இரண்டாம் கட்டத்துக்காக விண்ணப்பித்துள்ள மேலும் பல பேருக்கும் பொருத்தமான பிரதேசங்களை அடையாளப்படுத்தி வழங்குவதற்கு விரைவான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித் தார்.

மேலும் கொடுவா மீன் உற்பத்திப் பண்ணைகளையும் உருவாக்கி எண்ணெய் வளத்தின் கேந்திர நிலையமாக மத்திய கிழக்கு நாடுகள் விளங்குகின்றமை போன்று, இலங்கையின் கடலுணவுகளுக்கான கேந்திர நிலையமாக இரணைதீவு பிரதேசம் மாற்றப்படும் எனவும் தெரிவித்தார்.

கடற்றொழில் அமைச்சரின் முயற்சியால் சுமார் 7 கோடி ரூபா ஆரம்ப முதலீட்டில் உருவாக்கப்பட்டுள்ள இரணைதீவு கடலட்டைக் கிராமத்தின் முதலாவது கட்டத்தில் இரணைதீவைச் சேர்ந்த 83 பயனாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச சந்தையில் தாராளமான சந்தை வாய்ப்பைக் கொண்டுள்ள கடலட்டைகளை நவீன தொழில்நுட்பத்தின் ஊடாக பதனிட்டு ஏற்றமதி செய்யும்நோக்கில் உருவாக்கப்பட்டுள்ள குறித்த பண்ணையின் ஊடாக, சுமார் 300 பேருக்கு நேரடியான தொழில்வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளமையுடன் சுமார் 400 பேர் மறைமுகமாக தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளவுள்ளனர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

அரச மற்றும் தனியார் கூட்டு செயற்பாட்டுப் பொறிமுறை ஊடாக உருவாக்கப்பட்டுள்ள குறித்த பண்ணைக்கான திட்டமிடலின் போது, கணிசமான பலனை இரணைதீவு மக்கள் பெற்றுக்கொள்ளும் வகையில் செயற்பாடுகள் அமைய வேண்டும் என்பதை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தி இருந்தார்.

இந்நிலையில் நிகழ்வில் உரையாற்றிய தனியார் முதலீட்டாளர்களான சுகத் இன்ரனானல் பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அரவிந்தன், குறித்த பண்ணையின் வருமானத்தில் 75 வீதமானவை இரணைதீவு மக்களையே சென்றடையும் என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.02.2021 இல் வெளியிடப்பெற்றது.